மே 1

May 1928.

JL
R673ணா211, N28
N28·1·5·
187120.

953

Registered No. M. 2330.

ஓம்

# சித்தாந்தம்

" எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே "


| மலர் க | பிரபவ ஆண்டு சித்திரைத் திங்கள்<br>1928 ஞு மே மீ | இதழ் ரு |
|---|---|---|


உள்ளுறை                                                பக்கம்


| | | |
|---|---|---|
| சமய ஆராய்ச்சி | ... ... பத்திராசிரியர் ... ... | 97 |
| கால இயல் | ... ... உதவிப் பத்திராசிரியர் ... | 102 |
| சம நிலை | ... ...வல்லை-பாலசுப்பிரமணியன், B.A. | 109 |
| மதிப்புரை | ... ... ... ... ... | 119 |



பத்திராசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார்,

ஆசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

உதவிப் பத்திராசிரியர்

வித்துவான்

பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்



சைவ சித்தாந்த மகாசமாஜ காரியாலயம்,

92, வரதா முத்தியப்பன் தெரு,

சென்னை.

1928


OFFICE OF THE REGISTRAR OF BOOKS 23 MAY 1928 MADRAS

# முக்கிய அறிக்கை

சென்ற மாத இதழில் சந்தாவைச் செலுத்தாதவர்கட்கு இம் மாத இதழ் வி. பி. தபால் மூலம் அனுப்பப்படும் என்ற அறிக்கையைக் கண்ணுற்ற பல அன்பர்கள் தங்கள் சந்தாவை யனுப்பியதோடு பல நண்பர்கள் சந்தாவையும் விரைவில் வசூலித்து மணியார்டர் மூலம் அனுப்பிப் பேருதவி புரிந்தனர். சிலர் மொத்தமாகத் தொகை யனுப்பி சந்தா வசூல் விவரம் பின்னர் அனுப்புவதாக எழுதியுள்ளார். சிலர் காரியதரிசி, பொருட்காப்பாளர் தவிர வேறு தங்கட்குத் தெரிந்த நண்பர்களிடம் சந்தாவைச் செலுத்தியதாக அறிவித்துள்ளார். அவ்வகைச் சந்தாவில் சில தொகைகள் பொருட்காப்பாளர் அல்லது காரியதரிசியிடம் சேர்ப்பிக்கப்பட்டுள்ளன. மற்றத் தொகைகள் இதுகாறும் சேர்ப்பிக்கப்படவில்லை.

இந்த நிலையில் இம்மாத இதழை வி. பி. தபால் மூலம் அனுப்புவது உசிதமல்லவென்று தீர்மானிக்கப்பட்டது. இவ்வறிக்கையைக் கண்ணுறும் அன்பர்கள் தங்கள் சந்தாவைச் செலுத்தி யிருப்பின் இன்னாரிடம் இன்ன தேதியில் செலுத்தப்பட்டது என்ற விவரத்தை காரியதரிசிக்குத் தெரிவித்தல் வேண்டும். சந்தாவை வசூலித்த நண்பர்களையும் உடனே அவ்வாறு தெரிவிக்கச் செய்வதோடு பணத்தையும் சமாஜத்துக்கு அனுப்பச் செய்யவேண்டும். இதுவரை காரியதரிசி, பொருட்காப்பாளர் கையிற்கிடைத்த தொகைகட்கு இவ்விதழோடு ரசீதும் வருகிறது. சந்தாவைச் செலுத்தியும் ரசீது பெறாத நேயர்கள் மேற்கண்ட அறிக்கைப்படி நடத்தல் வேண்டும். இம்மாதம் 31-ம் தேதிக்குள் காரியதரிசி, பொருட்காப்பாளரிடம் தங்கள் சந்தாவைச் சேர்ப்பியாத எல்லா அங்கத்தவர்கட்கும் அடுத்த இதழ் வேறு அறிக்கையின்றியே வி. பி. தபால் மூலம் அனுப்பப்படும்.

சென்னை
10—5—1928.

ம. பாலசுப்பிரமணியன்,
காரியதரிசி.

ஓம்

# சித்தாந்தம்

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

| மலர் ௧ | பிரபவ ஆண்டு சித்திரைத் திங்கள்<br>1928 ௵ மே ௴ | இதழ் ௫ |
|---|---|---|

## சமய ஆராய்ச்சி

[பத்திராசிரியர்]

சமயம் என்பது தத்துவம், ஆசாரம், சடங்கு என்னும் முப்பகுதிகளைப் பெரும்பான்மையும் உடையது. தத்துவம் கடவுள், உயிர், உலகம் என்னும் முப் பொருள்களின் இயல்புகளையும் அவை ஒன்றற்கொன்று இணங்குமாறும் பிணங்குமாறும் தெளிய எடுத்துரைக்கும் சிவஞான போதம் முதலிய அறிவு நூல்களான் கூறப்படும் பகுதி. ஆசாரம் சமயத்தார் தத்தமக்கு நன்றெனக் கொண்ட ஒழுக்கங்களின் வழுவாது நின்று ஒழுகுதல். சடங்கு சமயத்தை முன்னிட்டுக் கொண்டு ஓர் உயிர் கருத் தரிப்பது முதல் அஃது இறந்த பின்னரும் செய்யப்பட்டு வரும் பலவகைச் செயல்கள்.

இவற்றுள் முதலாவதாகிய தத்துவப் பகுதி காலந்தோறும் பெரிதும் வேற்றுமையடைய மாட்டாது; ஆசாரமும் சடங்கும் அவற்றைக் கைக்கொள்ளும் மக்கள் அறிவு வளர்ச்சி, நாகரிகப் போக்கு முதலியவற்றிற்கு இசைந்தவாறு விரிந்தும் சுருங்கியும் திரிந்தும் வரும். தத்துவம் ஒன்றேபற்றி மக்கள் ஒழுகலாறு இன்னதென்று அறிதலாகாது. தத்துவம் மட்டும் உணர்ந்து ஏனை ஆசாரம், சடங்கு முதலியவற்றுள் ஒன்றையும் கைக்கொள்ளாதார் சமயத்தார் என்று கூறப்பட்டார். ஏனெனில் சமயம் என்பது சடங்குகளிலும் சமயாசாரத்திலும்தான் காணப்படுவது. ஆனால், தத்துவப் பகுதி ஒன்றைமட்டும் போற்றிப் பிறவற்றைத் தள்ளுவோர் சமயத்திற்கு மேற்பட்ட ஞானநிலை அடைந்தவராகவாதல் அன்றிச் சமய ஞானத்தால் ஆகிய நன்மையினை அடையாதவராகவாதல் இருத்தல் வேண்டும். ஒருவர் எத்தகைய கொள்கையை உடையவராக இருப்பினும் அக்கொள்கைக்கு ஏற்றவாறு செய்கைகள் உடையவராக இருந்தா லன்றி அக்கொள்கையின்படி அவர் ஒழுகியவராக மாட்டார்; அதனால் அவர் எய்திய ஞானம் ஏட்டுச் சுரைபோல அவருக்கு உறுபயன் தர மாட்டாது. சமயம் ஒன்றைக் கொண்டோர் எத்தகையினரேனும் சில ஒழுக்

வேண்டும். ஒரு துறையில் நின்று ஒரு முறையாக ஆராய்ந்து ஒருவர் மனமும் நோவாமல் உண்மையினை உரைத்தல் வேண்டும். சமய சம்பந்தமாகச் சிலவற்றை நாம் இங்கே கூற விரும்புகின்றோம். சமய நூல்கள் எல்லாம் ஒரே காலத்திலே தோன்றியவை அல்ல; தோன்றிய காலத்தே அவை மக்களால் ஒப்புக் கொள்ளப்பட்டன. அவற்றுள் சில பொருள்கள் இப்போது அருவருக்கத் தக்கனவாகவும் உள்ளன. இந்நூல்கள் அவ்வக்கால இயல்புக் கேற்றவாறே எழுதப்பட்டவை என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாம். ஆராய்ச்சி இன்னும் குழவிப் பருவத்திலேயே இருக்கிறது. ஒரு நூலிலே ஒரு குறை கூறிவிட்டாலும் அதனோடு அந்நூலே போய் விட்டதாக நம்மவர் நினைக்கின்றனர். எல்லா ஆசிரியர்களும் குற்றங் குறையில்லாத தெய்வப் பிறவிகளென்றே கருதுகின்றனர்; எல்லாவற்றையும் மதத்தோடு முடிபோட்டுக் கொள்கின்றனர். சுத்தம், சுகாதாரம் முதலியவற்றைக் கூறினும் மதத்தைக் கொண்டு வந்து அச்சுறுத்துகின்றனர். பற்கொம்புக் கொள்ளுவதிலும் ஆச்சிரமபேதம் ஏற்பட்டு விடுகிறது. தமிழ்ப்பாட்டு வகையிலும் வருணபேதம் வந்து விடுகிறது. மலங்கழிப்பதற்கும் திக்குவேண்டும்; உண்பதற்கும் திக்குவேண்டும். இங்ஙனமெல்லாம் பலபடியாகவும் மிகுதியாகவும் எழுதி யெழுதி நூல்களிலே வைத்துவிட்டார்களே யல்லாமல் இவற்றுள் எவ்வெவை அறிவுக்குப் பொருந்தும், எவ்வெவை எம்மட்டும் செய்கைக்குவரும் என்ற விஷயங்களைப் பலர் உணரவில்லை. இவைகளுள் நூற்றுக்கு ஒரு பங்கு மக்கள் அநுபவத்துக்கு எக்காலத்தும் வந்திருக்க இயலாது. அநுபவத்துக்கு வாராமல் எடுத்ததற்கெல்லாம் ‘மதம் பறந்தது; நாத்திகம் சிறந்தது’ என்ற போலியுரைகளே இப்பொழுது தோன்றியுள்ள ஆராய்ச்சி இயக்கத்துக்கு அடிப்படையாக வுள்ள காரணம்.

இது தக்கவாறு தக்கவர்களால் வரம்பு கோலி முறைப்படுத்தப்படுமாயின் இதனை நற்காலமென்றே நவிலலாம். எதிர்த்துவரும் சூறையை அஞ்சி ‘நாத்திகம், நாத்திகம்’ என்று பதறிக் கதறிச் சிதறி ஓடுவோர் சமயத்துக்கு நன்மை செய்தவராக மாட்டார். நம்மனோர் மனப்பான்மையினை ஒரு சிறு உதாரணத்தால் விளக்கி இக்கட்டுரையினை முடிப்போம். ‘இராவணனுக்குப் பத்துத் தலை இல்லை’ என்று ஒருவர் கூறினால் உடனே மற்றொருவர், ‘அப்பொழுது கம்பராமாயணம் பொய்; தேவாரம் பொய்; வான்மீகி முனிவர் பொய்; சமயம் பொய், தெய்வம் பொய்,’ என்று ஆவேசம் கொண்டு பேசுகிறார். இராவணனுக்குப் பத்துத் தலை என்றது பொருந்தாதெனத் தோன்றியே ஒரு சிலர் அவனுக்கு ஒரே தலையென்றும் அது விசித்திரமாக அமைக்கப்பட்ட அரியணையிலே இருக்கும் கண்ணடியினால் பத்துத் தலையாகப் பார்ப்பவருக்குத் தெரியும் என்றும் அக்காலத்தும் அவன் அறிவிற் சிறந்தவனாகையினால் அவ்வாறு அலங்காரமாகக் கூறப்பட்டான் என்றும் இக்காலத்து வேறு சிலரும் கூறுகின்றனர் என்றால், கம்பர் காளி வரப்பிரசாதம் பெற்றவராயிற்றே அவருக்கு அது தெரியாமற்போயிற்றோ? என்றும் அப்பர் அருள் பெற்றும் அவருக்கு விளங்கவில்லையோ? என்றும் நமக்குமட்டும் இத்தகைய நுண்ணறிவு வந்துவிட்டதோ’, என்றும் இகழ்ந்து நகைய1டிச் செல்கின்றனர்.



இவ்வொரே உதாரணத்தைக் கொண்டு நாம் சிலவற்றை நன்கு உணரலாம். சமய நூல்கள் காலந்தோறும் தோற்றியபடியால் அக்காலத்து மக்களில் அறிவுடையோருடைய அறிவுப் பகுதி அறியாமைப் பகுதி என்னும் இரண்டையும் அவை உடையனவையாகவே உள்ளன. அறியாமை இருப்பதனால் ஒருவர் தாழ்ந்தவரென்று நினைக்கவே கூடாது. செந்தமிழ்ப் புலமை நிறைந்த ஒருவர்க்கு வடமொழி வாராது என்றால் அஃது அவர்க்கு இழுக்காதல் கூடாது. புராணங்களில் பல, சில் சில உண்மைகளை எடுத்துக் கூறவந்த கட்டு நூல்கள். சில முழுப்பொய்; சில பொய்யும் மெய்யும் கலந்தவை; சில மெய் வரலாறுகள்; சில புனைந்துரைகள். இவற்றை முன்னர்த் தெளிந்து கொள்ளல்வேண்டும். எந்நாட்டாரிடத்தும் கட்டுக் கதைகளும் பொய்க் கதைகளும் உண்டு. அது போலவே நமது நாட்டிலேயும் உள. நமக்கும் அவர்கட்கும் வேற்றுமை யாதெனில் நாம் அவற்றை மதத்தோடு கலந்து வைத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் அவை யெல்லாவற்றையும் ஒழுங்காகப் பிரித்து இவை பொய்க்கதைகள், இவை மெய் வரலாறுகள், இவை செய்யுள் நூல்கள் என வகுத்துக் கொண்டு அறிவிலும் ஆராய்ச்சியிலும் ஓங்கி வருகின்றனர். நம்மவரோ இன்னும் அங்ஙனம் பிரித்து அமைக்கவில்லை. ஆனால் இவை யனைத்தும் நம் முன்னோருக்கோ அல்லது இப்போதுள்ள பெரியோர்களுக்கோ தெரியாதெனச் சிறிதும் எண்ணலாகாது. தெரிந்தமையினாலேதான் வியாக்கியானங்கள் காலந்தோறும் வேறுபட்டன; அதனாற்றான் அந்தரார்த்தங்கள் கிளம்பின; அதுபற்றியே ஸ்தூல தருமம், சூக்ஷ்ம தருமம் என்னும் பாகுபாடுகள் வந்தன; அதுபற்றியே ஆத்ம புராணங்கள் எழுந்தன.

இங்ஙனமெல்லாம் குறுக்கு வழியாக எழுதுவதும் பேசுவதும் காட்டினும் நேரே இவைகளின் நிலையினை வரம்பிட்டுக் கூறிவிடுதல் சாலச் சிறந்தது. வேதத்துள்ளும் விதிவாக்கியம் என்றும் துதிவாக்கியம் என்றும் உண்டு. வன்மை மென்மை கூறுபாடுகள் எல்லா நூல்களுக்கும் உள.

நாம் இவற்றையெல்லாம் என்று வரையறுத்து ஒழுங்கு செய்துகொள்வோமோ அன்றுதான் நாம் நாகரிகமுடைய மக்களாகத் திகழ்வோம். இங்கே ஒன்று கூறுதற்கு ஞாபகம் வருகிறது. இராமாயணம் முற்றும் ஆன்மா பரம்பொருளை நாடுவதையே கூறுவதென்றும் வள்ளிநாயகியார் திருமணம் சிவஜீவ சம்பந்தம் காட்டுவதென்றும் முப்புரமென்பது மும்மலகாரியம் என்றும் அணுபக்ஷம் சம்புபக்ஷம் என்றும் கற்பபேதம் என்றும் கூறப்படுவன எல்லாம், சில பொருள்கள் பொருந்தாமைக்குக் காரணங்காட்டி, பொருத்துதற்கெழுந்த சூழ்ச்சிகளேயாம்.

மேலேகாட்டிய உதாரணத்து இராவணனுக்குப் பத்துத்தலை என்பது வழங்கிய கதை என்று விடுத்தால் வரக்கடவதாகிய இழுக்கு என்னை? கம்பரோ அப்பரோ அதனை அவ்வாறே ஏன் பெய்துரைக்க வேண்டுமெனின் அவர் புலவர் பெருமக்களாதலின் வழக்காற்றைச் செய்யுளுள் வைத்துப் பாடுதலேயன்றி அவர் வேறென் செய்வர்? அதனால் அவருடைய லமைக்கோ அருளுக்கோ வரும் ஏதம் ன்னை? பாட்டுக்குப் பொருளாகப் பொய்ப் பொருளையும் எடுத்துக் கூறலாமோவெனின், பாட்டின் நேர் பயன் மகிழ்ச்சி ஊட்டல் அன்றோ? இன்

கங்களையும் சில சடங்குகளையும் அனுட்டித்தே தீரல் வேண்டும். இன்றேல் தமது கொள்கை உறுதிப்பட்டு வளர்ந்தோங்கி விழுப்பயன் பயத்தல் எஞ்ஞான்றும் இல்லை. கடவுளை அடையும் நெறியாகிய சமயத்தால் உணரக் கடவதாகிய இசைவுநிலை எவ்வாற்றானும் உணரலாகாது; உணரப்படாதபோகவே அது நுகரப்படுதலும் இல்லை.

இக்காலத்தே பெரும்பான்மையான மக்கள் சமயாசாரங்களை நெகிழவிட்டுள்ளார். அவற்றில் அவருக்கு நம்பிக்கையும் இல்லை. சமய ஒழுக்கம் தாழ்ந்த மக்களுக்கு வேண்டப்படுவதே அன்றி உயர்ந்த தமக்கு அஃது அப்பாற்பட்டது என்பர். சமயச் சடங்குகளாகக் கருதப்படும் தீக்ஷை முதலியவற்றிலும் பலருக்கு நம்பிக்கை குறைந்துளது. மணம், சீமந்தம், உத்தரகிரியை, சிரார்த்தம் முதலியவற்றிற்கும் பலருக்குப் பொருள் தெரியாது; அவருக்குத் தெரிந்து கொள்ள விருப்பமும் இல்லை; ஆனால் பழக்கம் என்ற ஒன்றைக் கொண்டே பெரும்பாலும் சாத்திரத்திற்கும் சம்பிரதாயத்திற்கும் பொருந்தாமலே யாதோ ஒரு வகையில் செய்து முடித்து மகிழ்கின்றனர். மணச்சடங்குக்குச் சிறந்த இலக்கினம் வேண்டுமென்று எத்தனையோ முயன்று தெரிந்தெடுத்துப் பின் அந்த இலக்கினம் தவறியே மணமுடித்தவர் பலப் பலர். சடங்குகளைச் செய்வோரிடத்தும் சமயாசாரங்களில் ஒழுகுவோரிடத்தும் யாவும் ஒழுங்காக நடைபெற முடியாதெனின் மற்றையோரைப் பற்றிக் கூறவேண்டுவதில்லை.

இத்தகைய நெகிழ்ச்சியினால் மக்கள் சமய ஒழுக்க வழக்கங்களைப் பற்றி ஆராயத் தலைப்பட்டு[illegible] வேண்டாம் என்போர் அறிவைக் கொன்றவராவார். ஆராய்ச்சி எப்பொழுதும் வேண்டற்பாலதே. ஆனால் ஆராய்ச்சி செய்வோர் எதைப் பற்றி ஆராயத் தொடங்குகிறாரோ அதைப் பற்றிய விஷயங்களை நன்கு தெரிந்துகொண்டு ஒரு நிலையில் நின்று ஒழுங்காக ஆராய வேண்டும். அம்முறையை விட்டு ஒன்றோடொன்றைக் கலந்து எடுத்துக்கொண்டு ஒன்றை விட்டு மற்றொன்றின்மேல் தாவிச்செல்லுதல் ஆராய்ச்சிக்குப் பொருந்தாது. சமய ஆராய்ச்சி செய்வோர் சமய நூல்களிலே கூறப்பட்ட விஷயங்களையே சமயம் என்ற பெயரால் எடுத்துக் கொள்ள வேண்டுமே யன்றிச் சமய நூல்களிற் கூறப்படாமல் மக்கள் வழக்கத்திலே அறியாமை காரணமாகவோ வேறு எக்காரணமாகவோ நுழைந்திருக்கும் சிறு சிறு விஷயங்களை எடுத்துச் சமயப்பேரால் கண்டிப்பது பொருந்தாது. இத்தகைய மூடநம்பிக்கைகளைத் தனியே எடுத்து ஆராய்தல் வேண்டும். மக்கள் பெரிதும் உயிரின்கண் மிக்க ஆசை வைத்துக் கொண்டிருத்தலினாலும் அதுபற்றி இறப்பை நினையுந்தோறும் அச்சம் பெரிதுடையராதலினாலும் எந்நாட்டிலும் அச்சம், விருப்பம் ஆகிய இவையிற்றின் காரணமாகப் பல மூட நம்பிக்கைகள் உடையராக இருக்கின்றனர். மேனாட்டாரிடத்தும் மிகப் பெரிய மூட நம்பிக்கைகள் உள.

சமய ஆராய்ச்சி செய்வோர் சமயத்தார் ஒருவருக்கும் வருத்தம் உண்டாகாதபடி மெல்லிய சொற்களாலும் மதிப்புக் குறைவில்லாமலும் பேசுதலும் எழுதுதலும் வேண்டும். ஒருமை வாசகத்தை யாண்டும் பெய்துரைத்தலாகாது. இங்ஙனம் எழுதுதல் தமக்குச் சிறுமை யாதலோடு எடுத்துக்கொண்ட காரியத்துக்கும் இடையூறாகும். இஃது ஆராய்ச்சிக் காலம் என்று சொல்லலாம். மேனாட்டார் தமது சமய தத்துவத்தையும் ஆசாரங்களையும் சில நூற்றாண்டுகட்கு முன்னரே எத்தனையோ வகையாக மாற்றிக் கொண்டனர். அவர்கள் வேதமாகிய பைபிலும் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என இருவேறு தன்மைகளை அடைந்தது. ஜான் ஸ்டூவர்ட் மில் (John Stuart Mill) முதலான நுண்ணறிவாளர் எவ்வளவோ அரிய பொருள்களை ஆராய்ந்து வெளியிட்டார். அத்தகைய காலம் நமக்கு இப்பொழுதுதான் வந்திருக்கிறது. ஆனால் இங்கே ஆராய்ச்சி என்று பறையறைவோர் ஒரு நிலையிலே நின்று பொறுமையாகவும் பொருத்தமாகவும் எதையும் கூறுகின்றார் இல்லை. பல விஷயங்களைக் கதம்பமாகக் கூட்டிக் குழப்பித் தலை தடுமாற்றமாக ஏதேதோ மொழிகின்றனர். உதாரணமாக ஒரு சிலர், 'இந்து சமயம் என்பது ஒன்றில்லை; அதனால் நாம் அதைப் பற்றிப் பேசுவதெல்லாம் பொய்' என்பர். 'இந்து சமயம்' என்னும் சொற்றொடர் பொருந்தாதெனக் கொள்ளினும் அதனால் சைவம், வைணவம் என்பனவும் பிறவும் பொய்யாதல் யாங்ஙனம்? வேறு சிலர், 'மனுஸ்மிருதி ஒரு குலத்துக்கு ஒரு நீதி வகுப்பதால் அது சுட்டெரிக்கற்பாலது' என்பர். இன்னும் சிலர், 'பத்துப்பாட்டிலே புலாலுண்ணலைப்பற்றி வருவதால் அப்பகுதிகளை நீக்கி அதனை அச்சிட வேண்டும்' என்பர். மற்றுஞ் சிலர், 'திருமுருகாற்றுப் படையிலே மறியறுத்தல் யாரோ ஆரியர் ஒருவரால் தமிழரை இழித்துக் கூறுவதற்காக நுழைக்கப்பட்டது' என்பர். பிறிதொருவர் 'ஸ்மிருதிகளிலே ஊனுணவு சிரார்த்த மந்திரங்களிலும் காணப்படுவதால் தமிழரே பண்டுதொட்டுப் புலாலுண்ணாதார்' என்பர். ஒருவர், 'திருஞானசம்பந்தர் வேதியரானதால் சமணரைக் கழுவேற்றினர்; அவர் எமக்கு வேண்டாம்; நாவுக்கரையரே நமக்குத் தெய்வம்' என்பர். இக்கூற்றுக்கள் ஒருநெறியின்றிக் குலம், ஒழுக்கம், இக்கால நாகரிகம் என்னும் எல்லாம் சேர்ந்து பலதிறப் பட்டுச் சன்னல் பின்னலாக முரணிக் கிடத்தல் அறிஞர்க்கு இனிது விளங்கும். இவ்வாராய்ச்சியாளர் தமக்குள் ஓர் ஒற்றுமை காணப்படாவிட்டால் பெருமக்கள் இவற்றை எங்ஙனம் உணர்வர்?

இக்காரணத்தால் 'இவ்வாராய்ச்சியாளர்கட்கு ஒன்றுந் தெரியாது; இவர்கள் நாத்திகர்கள்; நாமோ சைவர்கள்; வைதிகர்கள்,' என்று சொல்லி விடுதல் சாலாது. அதனால் பெருக்கெடுத்து ஓடும் வெள்ளத்தை ஒருவர் இருவர் அணைகோலித் தடுத்து விடுதலும் இயலாது. ஆனால் சமயத்தார் இவையிற்றை ஓர் ஒழுங்கான முறையில் அமைக்க வேண்டுவது அவர் தமக்கு இன்றியமையாத கடமையாம். இடையிடையே புகுந்த தீய வழக்க வொழுக்கங்களையும் குற்றங் குறைகளையும் பரிகரிக்க வேண்டும். சமயாசாரம் சமயச்சடங்கு முதலியவைகளை அறிவுக்குப் பொருந்துமாறு திருத்தி அமைத்துக் கொள்ளல் வேண்டும். அது செய்யாமல் இருந்தால் சமயக் குழப்பம் விரைவிலே ஏற்பட்டு விடும்.

இனி ஆராய்ச்சி செய்வோர் சில சிறு உண்மைகளையேனும் தெரிந்துகொள்ள வேண்டும். சமய நூல்கள் இவை இவை எனவும் இவற்றிற்கு இது தான் இடமென்றும் அறிந்து கொள்ளல்

18/7/20

றேல் பாட்டைப் படிப்பார் யார்? எமக்கு நம்பிக்கை இல்லாத ஒரு கதை, சில உண்மைகளைக் கூற இடந்தருமேல் அதனை யாம் காப்பியமாகச் செய்யலாகாதோ? அதனால் நாம் அதனை நம்பினோம் என்பது எங்ஙனம் கொள்ளப்படும்? பஞ்ச தந்திரக் கதை பொய்யென்று யாவருக்குந் தெரியும். இருப்பினும் அதனைப் படித்து இன்புறுதார் இல்லை. கதை பொய்யாக இருப்பதனால் அதனிற் காணப்படும் உலக உண்மைகள் பொய்யாய் விடுமோ?

இங்ஙனமே புதுக்கதைகளைப் படிக்கின்றோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதையைப் படைத்து விடுகின்றனர். அக்கதை பொய் என்பது எல்லாருக்கும் தெரியும். இருப்பினும் அந்நூலிலே வரும் பாத்திரங்களைப் புலவன் குறித்தபடி உணர்ந்து நாம் மகிழவில்லையா? அத்தகைய பாத்திரங்கள் உலக அநுபவத்திலே இருத்தல் உண்மையாக இருத்தலினன்றோ நமக்கு மகிழ்வு வருகின்றது. இம்முறையிலேயே நாம் புராணங்கள் பலவற்றை ஆராய்ந்து தெளிய வேண்டும். இத்தெளிவு நமக்கு வேண்டுமே அன்றி நூல்களையோ அல்லது சில பாகங்களையோ கொளுத்துவதும் வேண்டாம்; மாற்றுவதும் வேண்டாம். மக்களிற் பலர் அக்காலத்திலே புலாலுண்ட காரணத்தால் நூலிலே அப்பொருள் பெய்துரைக்கப்பட்டது. அதனால் நமக்கு என்ன சிறுமை? பெருமை சிறுமை உணர்ச்சி காலத்துக்கேற்றபடி அன்றே அமையும்.

இதுகாறும் கூறியவாற்றால், ஆராய்ச்சி செய்வோர் தக்க வகையில் ஒழுங்கான முறையில் நின்று சமய ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்றும் நூல்களின் பெற்றியையும் அருளின் பெற்றியையும் உணரவேண்டும் என்றும் வற்புறுத்துகின்றோம்.

# கால இயல்

[உதவிப் பத்திராசிரியர்]

(பகுதி—க)

அருக்கன் பாதம் நினைக்குவர் அந்தியில்
அருக்கன் ஆவான் அரன்உரு அல்லனோ
இருக்கு நான்மறை ஈசனை யேதொழும்
கருத்தினை அறி யார்கள் மனவரே.

—திருநாவுக்கரசர்.

காலமென்பது, ஞாயிறு திங்கள் என்னும் கோள்கள், ஏனை உடுக்கள் என்னுமிவற்றது இயக்கங்களான் அளந்தறியப்படுவ தொன்றாம். சௌர மானம், சாந்திர மானம் என்றற் றொடக்கத்தான் வழங்கப்படுவன வெல்லாம் இதனாற்போந்த பெயர்களேயாம். ஞாயிற்றினியக்கத்தின் வைத்து அளந்தறியப்படும் பகலிரவென்னும் நாட்கூறுகள், நாழிகைகளாகவும் மாத்திரைகளாகவும் பகுக்கப்படுகின்றன. நாழிகைகள் நாளொன்றிற்கு அறுபதாக வகுக்கப்பட்டன. மாத்திரையிற் காலஅளவு, கண்ணிமைப்பும் கைந்நொடிப்பு மாமென்பது.

கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே.

என ஆசிரியர் தொல்காப்பியனார் எடுத்தோதியவாற்றான் இனிதுணரப்படுவதாம். *நாழிகையினை அளந்தறிதற்குப் பண்டைக் காலத்துத் தண்டமிழ் மக்கள் கண்ட செயற்கைக் கருவி, கன்னல் என்னும் நாழிகை வட்டிலாமென்பது 'குறுநீர்க் கன்னல் இனைத் தென்றிசைப்ப' எனவரும் முல்லைப் பாட்டானும் 'குறுநீர்க் கன்னலின் யாமங்கொள்பவர்' எனப்போந்த மணிமேகலையானும் அறியக் கிடக்கின்றது. இராப்போதில் உடுக்களின் உச்சநிலைகளைக் கொண்டும் நாழிகைகள் அளக்கப்படுகின்றன. மேனாட்டார் நாளொன்றினை இருபத்துநான்கு மணிகளாக வகுத்து வழங்கி வருகின்றனர். இவ்வளவை காண்டற்கு அவர் கண்ட கடிகாரப் பொறியே இஞ்ஞான்று உலகமெங்கும் காலங்காட்டுங் கருவியாக நின்று நிலவுகின்றது.

இனி ஞாயிற்றின் ஒளியும் ஒளியின்மையுமாய பகலிரவென்னும் இருபகுதியும் சேர்ந்தது ஒரு நாளும், திங்களின் வளர்ச்சியும் தேய்வுமாய ஒளிப்பக்கம் இருட்பக்கம் என்னும் இருபக்கங்களும் சேர்ந்தது ஒரு திங்களுமாகும். ஞாயிறு, இத்திங்கள் ஒவ்வொன்றினும், மேட முதலான ஓரைகள் ஒவ்வொன்றினைக் கடந்துகொண்டே இருக்கின்றது. ஞாயிறிவ்வாறு ஓரிராசியினின்றும் மற்றோர் இராசியைத் தலைப்படுதல் கொண்டே இத்திங்களின் முதலும் முடிவும் வரையறுக்கப்படுகின்றன. இதனால், இத்திங்கள் என்னும் கால அளவு, திங்களால் அளக்கப்பட்டுத் திங்கள் என்னும் பெயர் பூண்டு நிலவினும், திங்களின் தோற்ற முதலாகவாதல், அன்றி அதன் நிறையுவா முதலாகவாதல் அது தொடங்கப்படுதலின்றி, ஞாயிறு ஓரிராசியி னின்றும் மற்றோ ரிராசியைத் தலைப்படுகின்ற அந்நாள் முதலாகவே தொடங்கப்பட்டு நடைபெறுகின்றது. இனி, ஞாயிறு, தென்றுருவத்து மகரவோரை தொடங்கி, வடதுருவத்துக் கடகவோரை வரைசென்று சேரும் ஒரு பகுதியும், வடதுருவத்துக் கடகவோரை தொடங்கித் தென்றுருவத்து மகரவோரைகாறும் சென்றியங்கும் மறுபகுதியுமாய அவ்விரு பகுதிகளும் சேர்ந்தது ஒரு யாண்டாம். ஞாயிறு இவ்வாறு அவ்விரு பகுதியினடங்கும் ஓரைகள் பன்னிரண்டனையும், கடத்தற்குப் பன்னிரண்டு திங்களாதலின், யாண்டொன்றிற்குத் திங்கள் பன்னிரண்டாயின. ஆசிரியர், நச்சினார்க்கினியர், 'காலவுரிமை எய்திய ஞாயிற்றிக்கு உரிய சிங்கவோரை முதலாகத் தண்மதிக்கு உரிய கற்கடவோரை யீறாக வந்து முடியுந் துணை ஓர் யாண்டாம்' என இவ்வாண்டின் தொடக்கமும் இறுதியும் காட்டுவர். ஞாயிறு, சிங்கவோரையில் ஆட்சி எய்தி நிற்கின்றது. அங்ஙனமே திங்கள் கற்கடவோரையில் ஆட்சி எய்தி நிற்கின்றது. இதனான் இவ்வாண்டு ஞாயிற்றின் ஆட்சியில் தொடங்கப்பட்டுத் திங்களின் ஆட்சியில் இறுதி யடைகின்றது. கொல்லமாண்டு இஞ்ஞான்றும் இவ்வாறே சிங்கவோரையாகிய ஆவணித் திங்களில் தொடங்கப்படுகின்ற தெனினும், நந்தமிழ்நாட்டாண்டின் தொடக்கமாக அனைவரானும் கொள்ளப்படுவது மேடவோரையாகிய சித்திரைத் திங்களே யாம். இது, கால உரிமை எய்திய ஞாயிறு உச்ச நிலையடைந்து நிற்கும்

* இலவம், துடி, கணம், நொடி, மாத்திரை என்பன ஒரு பொருட்கிளவிகளாமென்பது.

'கலையுந் துடியும் கணமுமாத் திரையும்
நொடியும் பிதிரும் நுட்பமும் திட்பமும்
நிமிடமும் காலநுட்ப மாகும்'

என வரும் பிங்கலந்தை யானறிக.

அக்காரணம்பற்றி நிலை நிறுத்தப்பட்டு நடைபெற்று வருவதொன்றும்.

இவ்வுலகு ஒரு முறை தன்னிற்றான் சுழன்றியங்க ஒரு நாளும், திங்கள் இவ்வுலகினைச் சூழ்ந்து ஒரு முறை வலம்வர அந்நாட்கள் முப்பது கொண்ட ஒரு திங்களும், இவ்வுலகு ஞாயிற்றினை ஒரு முறை சுற்றி முடிக்க நாட்கள் முன்னூற்றுத் தொண்ணூற்றைந்தரை கொண்ட ஒரு யாண்டுமாமென்பது வான சாத்திர வழக்காம். இங்ஙனம் இவை ஒன்றை ஒன்று முறை பிறழாது சுற்று மிச்சுழற்சியானே, நாள், பக்கம், நிறையுவா என்றின்னோரன்னவெல்லாம் ஒரு படியாக மாறி மாறி வருவதாமென்பதும், அதுவாம்.

இவை தம்முள் நாட்கள் ஒவ்வொன்றும் (உபராகத்தில், சந்திராதித்தரிடத்தன்றி) ஏனைக் கோள்கள்போல் கட்புலப்படாத இராகு கேதுக்களை ஒழித்தொழிந்த எழு கோட்களின் பெயரான் ஞாயிறு, திங்கள், செவ்வாய் புதன், வியாழன் வெள்ளி,*சனி யென வழங்கப்படுகின்றன. இந்நாட்கள் எழுஞ் சேர்ந்தது ஒரு கிழமை என்ப. இதனைச் சிலர் வாரமெனவும் வழங்குவர்.

இனித் திங்கள் ஒவ்வொன்றும் அவ்வத் திங்களின் உவாநாளொடு புணர்ந்து தோன்றும். உடுப்பெயர்களான், சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி என்றற்றொடக்கத்தான் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றுள் பல திரிந்தும் சிதைந்துங் காணப்படுகின்றன.

இனி யாண்டுகட்குப் பெயரிட்டு வழங்கல் பண்டைக் காலத் தின்றென்று தோன்றுகின்றது.

'சித்திரைச் சித்திரைத்திங்கள் சேர்ந்தென'

எனவும்,

'ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்
தழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று
வெள்ளி வாரத் தொள்ளெரி யுண்ண'

எனவும், போந்த சிலப்பதிகார அடிகளான் இவ்வுண்மை நன்குணரக் கிடக்கின்றது. ஈண்டுத் திங்கள், பக்கம், திதி, மீன், கிழமை முதலானவற்றை விளங்க எடுத்துரைத்த ஆசிரியர் இளங்கோவடிகள் யாண்டின் பெயரொன்றும் தோன்றக் கூறாமை காண்க. இதுகாறும் வெளிப்போந்த செப்புப் பட்டய சிலாசாதனங்களும் அவ்வம்மன்னர் தம் ஆட்சியுட்பட்ட ஆண்டுகளின் எண்களானே இலங்குகின்றன.

இங்ஙனம் கிளந்தெடுத் தோதிய இவைகள் பெரும்பொழுது, சிறுபொழுதென்னும் இருவகைப் பாகுபாட்டுள் அடக்கப்படுகின்றன. ஆசிரியர் தோல்காப்பியனார்,

காரும் மாலையும் முல்லை, குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்.

என்றற்றொடக்கத்தான் அவ்வத்திணைகட்குரிய பெரும் பொழுது சிறு பொழுதுகளை ஆண்டாண்டு இயைபுற எடுத்தோதிச் செல்வர். அவ்வாற்றான் அவர் காட்டிய பெரும் பொழுதுகள் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், வேனில் என ஆறாம்.

*'கதநபம வெனுமா வைந்தெழுத்து
மெல்லா வுயிரொடுஞ் செல்லுமார்முதலே'

'சகரக் கிளவியு மவற்றோரற்றே
அஐஔ வெனுமூன்ற லங்கடையே'

என்னுந் தொல்காப்பியச் சூத்திரங்கள், சகரமாகிய மெய், அகர ஐகார, ஔகாரமென்னு மூன்றுயிரொடுங்கூடி மொழிக்கு முதலில் வாராவென அறுதியிட்டுரைத்தலின், சனி என்பது அக்காலத்து அதற்குரிய நீலன், காரி, மந்தன் ஆதிய வேறு பெயர்களுள் ஒன்றான் வழங்கப் பட்டிருத்தல் வேண்டும்.



இவ்வாறு பெரும்பொழுதுகளே.

காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனி லென்றாங்
கிருமூன் றிறத்தது தெரிபெரும்
[பொழுதே.

என நாற்கவிராச நம்பிகளால் தொகுத்தோதப்பட்டன. இஃதடிப்பட்ட சான்றோரனைவர்க்கும் ஒப்ப முடிந்த தொன்றாதலின், பெரும் பொழுதுகள் ஆறேயாமென்பது தேற்றமாதல் காண்க. இவை ஒவ்வொன்றுந் திங்களிவ்விரண்டு கொண்டு திகழ்கின்றன. ஆவணியும் புரட்டாதியுமாய திங்களிரண்டும், கார் காலமெனவும், ஐப்பசியும் கார்த்திகையுமாய திங்களிரண்டும் கூதிர்காலமெனவும், மார்கழியுந் தையு மாய திங்களிரண்டும் முன்பனிக்காலமெனவும் மாசியும் பங்குனியுமாய திங்களிரண்டும் பின்பனிக்காலமெனவும் சித்திரையும் வைகாசியு மாய திங்களிரண்டும் இளவேனிற்காலமெனவும், ஆனியும் ஆடியுமாய திங்களிரண்டும் வேனிற்காலமெனவும் வழங்குப. வேனிலை முதுவேனில் எனவும் கூறுவர். இவை பருவகாலங்கள் எனவும் பெயர் பெறும். இவை அவ்வக் காலத்துத் தட்ப வெப்ப நிலைகளின் இயல்களை நன்கினி துணர்ந்து வகுக்கப் பட்டனவாதல் தெள்ளிது.

இனிச் சிறுபொழுதாவன படுசுடரமயந் தொடங்கி நண்பகலீறாக, மாலை, யாமம், வைகறை, காலை, நண்பகல் என ஐவகையினவாம். சிறுபொழுதாறெனக் கொள்வாரு முளர். ஆசிரியர் தோல்காப்பியனார் இவற்றைத் தொகைப்படுத் தோதினாரல்லர். அவ்வத்திணைகட்குரிய பொழுதுகள் இவ்விவையாமெனக் கிளந்து சென்றனர். இது பெரும்பொழுதுரைத்த வாண்டே எடுத்துரைக்கப் பட்டமை காண்க. அங்ஙனங் கிளக்கு நெறிக்கண்,

'வைகுறு விடியன் மருதம்'

என்றெழுந்த சூத்திரம், மருதத்திணைக்குரிய சிறு பொழுதாமாறு உணர்த்தப் போந்த தொன்றும். இதன்கட் போந்த 'வைகுறு விடியல்' என்னும் பகுதியினை உரையாசிரியரும், ஆசிரியர் நச்சினார்க்கினியரும் 'வைகுறுவும் விடியலும்' என உம்மைத் தொகையாக்கி 'வைகுறு' என்பது விடியலின் மாறுபட்ட வேறொரு பொழுதாமெனக் கொண்டு, அவ்வாற்றான் சிறு பொழுதாறெனக் காட்டினர். ஆசிரியர் மாதவச் சிவஞான முனிவரர் 'வைகுறு விடியல்' என்பது வினைத்தொகையாமென விளக்கிச் சிறுபொழு தைந்தாமாறு நிலையிட்டுரைத்தனர். இங்ஙனம் தொல்லானை நல்லாசிரியர் வழக்கினுட் பயின்ற சிறுபொழுதைந்தே என்பது அவர் ஆண்டெடுத்துக் காட்டிய,

'காலையும் பகலுங் கையறு மாலையு
மூர்துஞ் சியாமமும் விடியலு மென்றிப்
பொழுதிடை தெரியிற் பொய்யே காமம்'

என்னுங் குறுந்தோகைச் செய்யுளானும் இனிதுணரக் கிடக்கின்றது. ஈண்டுப் பகலெனவே பிற்பகலு மடங்குமெனின், அதுபற்றி முன்பகலுமடங்குமென்றொழியாது காலையை வேறு கூறினமையின் அது கருத்தன்று என்றும், 'வைகறை யினையே விடியலென்றமையிற் காலையை விடியலென்றல் பொருந்தா' என்றும், முனிவர் பெருமான் விளக்கியருளிய நுட்பம் பெரிதும் ஒட்ப முடைத்தாதல் காண்க. இனி, இத்தொல்காப்பியச் சூத்திரங்களையே தம்முரைக்கண் எடுத்தாண்ட இறையனார் களவியல் உரையாசிரியரும், ஏனைத்திணைகட்குச் சிறுபொழு

தொரோவொன்றே எடுத்துரைத்தாங்கு மருதத்திணைக்கும், வைகறையாமம் ஒன்றே சிறுபொழுதாமெனக் காட்டியவாற்றான் அவர்க்கும் சிறுபொழுதைந்தே என்பது கருத்தாதல் காண்க. அகப்பொருள் விளக்க நூலாசிரியராம் நாற்கவிராச நம்பிகள்,

மாலை யாமம் வைகறை யெற்படு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்
கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்.

எனச் சிறுபொழு தைந்தாமாறு வரையறுத் துரைத்தமை இவ்வைய மொழிக்கும் மெய்யுரையாக விளங்குகின்றது.

‘காலை வெம்பகல் கதிரவன் குடதிசை [காக்கும்
மாலை யாமம் வைகறை யெலாம்’

எனக் கந்தபுராண முடையாரும் சிறுபொழுதைந்தே கொண்டனர். இதுகாறும் காட்டியவாற்றான், சிறுபொழுதைந்தே என்றல் தெளிபொருளாதல் காண்க. இனி, யுகம் கற்பம் என்றின்னோரன்ன வெல்லாம், பல்லாயிரத்தின் மிக்க யாண்டின் தொகைகட்கு, ஒவ்வோராற்றான் இட்டு வழங்கிய வெவ்வேறு பெயரா மென்க.

இங்ஙனங் காட்டப்பட்ட இக்காலபேத இயல்களனைத்தினையும் நன்கினிதுணர்ந்து தேக்கித் திளைத்த நல்லிசைப் புலவர்கள், அவ்வத்திணைகளின் வைத்து இக்காலங்களின் விசித்திர இயல்களைச் சித்திரித்துப் பாடிய கொழுஞ்சுவை ததும்பும் செழுந்தமிழ்ப் பாடல்கள் ; அறிவோர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் அழகார்ந் திலங்குவனவாம். இப்பாடல்களான் ஆக்கப்பட்ட அருந்தமிழ்த் தொகை நூல்களே, நஞ்செந்தமிழ் அம்மனையின் சிறந்த அணிகளெனப் பரந்தொளி பரப்புகின்றன. அவை தம்மை எல்லாம் இக்காலங்களின் வைத்து இணைத்தெடுத்துக் காட்டுவதாயின், கட்டுரை பெரிதும் பரந்து விரிந்து செல்லுமாகலான் அப்பகுதியின் ஏதும் எடுத்துரைப்ப இசைந்திலம்.

இனி இவ்வாறு பரந்து காட்டும் இயல்பின் மிக்க இக்கால வேறு பாட்டின் விரிவனைத்தும் அளவியல் நிலையான் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் முப்பகுதியுள் அடக்கப்படுகின்றன. பௌட்கரம் முதலிய சிவாகமங்களும் இப்பாகுபாட்டினையே எடுத்தோதுவனவாம். இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்பன முறையே தொழிலது கழிவு, தொழில் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாத நிலைமை, தொழில் பிறவாமை எனவே பொருள் படுதலானும், தொழில் என்பது பொருளின் புடைபெயர்ச்சியே யாகலானும், அப்பொருளின் புடைபெயர்ச்சியை நுணுகி நோக்குங்கால் அஃது ஒரு கணத்தன்றி மறுகணம் நில்லாமையானும் நிகழ்ச்சி என்பதொன்றில்லை எனக்கொண்டு காலமென்பது இறப்பு, எதிர்வு என்னும் இருபகுதியானே அடங்குமென்ப ஒரு சாரார். ஆசிரியர் சேனாவரையர்,

‘இறப்பி னிகழ்வி னெதிர்வி னென்றா’

எனத் தொடங்கும் வினையியற் சூத்திரத்தே, ‘தொழிலாவது பொருளினது புடை பெயர்ச்சியாகலின், அஃதொரு கண நிற்பதல்லது இரண்டு கண நில்லாமையின் நிகழ்ச்சியென்பதொன்று அதற்கில்லை’ என உரைக்குமாறு காண்க. அளவியல் நிலையில் இஃதிவ்வாறு காணப்படினும், இடையறாது ஒரு தொடர்புற்று அடுத்தடுத்து விரைந்து நிகழும் ஒரு தொகுதித்தாம் வினை நிகழ்ச்சிக்கண் முற்பிற்பாடு காட்டி வரையறுத்தல் செல்லாமை



யான், நிகழ்காலம் என்ப தொன்றுண்டெனக் கொள்வது இன்றியமையாததாயிற்று. ஆசிரியர் சேனாவரையரும், ‘உண்டல் தின்றலெனப் பஃறொழிற் றொகுதியை ஒரு தொழிலாகக் கோடலின் உண்ணா நின்றான், வாரா நின்றான் என நிகழ்ச்சியுமுடைத்தாயிற்றென்பது’ என அமைவு கூறுதல் காண்க. இவ்வுண்மையானே புலனெறி வழக்கினும் பரவை வழக்கினு மெல்லாம் காலமென்பது இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் அம்முக்கூற்று வாய்ப்பாட்டான் ஓதப்பட்டு வருகின்றன.

இப் பல்வே றிலக்கணப் பகுதித்தாய் விளங்கும் கால வேறு பாட்டான், இவ்வுலகமும், இவ்வுலகத்துட்பட்ட உயிர்களும், மற்றிதன் தொடர்புடைய ஏனை எல்லாப் பொருள்களும் ஒவ்வொரு கணத்தும் வெவ்வேறு நிலைகளை அடைந்துகொண்டே இருக்கின்றன. காலையில், வளர் ஒளி இள ஞாயிற்றின் எழில் கண்டு தளையவிழ்ந்த தாமரை, மாலையில் நிலாக்கதிர் கண்டு நிலைகூம்புகின்றது. மாலையில், நெடுந்திரை யழுவத்து நிலாக்கதிர் கண்டு களித்து மலர்ந்த கருங்குவளை, காலையில் வெங்கதிர்க் கனலியின் வெப்பங் கண்டு வாடுகின்றது. வேனிற்காலத்து வெப்பமுழந்து தளிர்த் தரும்பிய தாவரங்களெல்லாம், பனிக்காலத்துப் பழுத்துதிர்ந்து பயந்துறந்து நிற்பக் காண்கின்றேம். கார்காலத்துக் கண்கவர் வனப்பின் தண்போதலர்ந்து தாதுந் தளிரு மேதகத்துவன்றி நீரும் நிழலுந் துதைந்து மிளிர்ந்த சோலைகளெல்லாம், வேனிற்காலத்து வெப்பந் தெறலான் கானல் பரந்து கவினழிந்து காணப்படுகின்றன.

‘செந்தா மரைவிரியத் தேமாங் கொழுந் [தொழுக
மைந்தா ரசோக மடலவிழ’

வந்த, இளவேனல்,

‘காந்தண் மலரக் கமழ்கொன்றை பொன் [சொரியப்
பூந்தளவ மாரப் புகுந்த’

காரென மாறுகின்றது.

இன்னும் மக்கள் நிலையோ எடுத்தியம்பவியலாது. இன்று, மழலையந் தீஞ்சொல் குழவிப் பருவத்து மகவாயிருந்த ஒருவன், சில்லாண்டில் மணப்பருவத்துக் கட்டழகின் மிக்க காளையாகின்றான். காளைப் பருவத்து வேளெனநின்ற அவ்விரகன், பின்னும் சில்லாண்டில் ‘குந்தி நடந்து குனிந்தொரு கைக்கோலூன்றி, நொந்திருமி ஏங்குங் கிழவனாகின்றான்.’ இங்ஙனமே, ஆம்பல் நாறும் தேம்பொதி மழலையின், பேதைப் பருவப் பூங்கோதையாம் ஒரு பெண், சில்லாண்டில் தன் பெதும்பை நீத்து மணப்பருவத்து மங்கையாகின்றாள். மங்கைப் பருவத்துப் பொங்கெழில் கனிந்த அம்மடந்தை, இன்னும் சில்லாண்டில் தனது அரிவை, தெரிவையாம் பருவமும் கடந்து, பேரிளங் கொடியெனுங் காரிகையாகி வேற்கண் கெட்டுக் கோற்கண்ணளாகின்றாள். இவ்வாறு காலத்தாற் றோன்று மாறுதல்கள் கணக்கிறந்தனவாம். இன்று நாம் கண்ட ஒருபொருள் நாளை அதே நிலையில் காணப்படுவதில்லை. ஒவ்வொரு கணமும் எத்தனையோ மாறுதல்கள் நிகழ்கின்றன. இவ்வுலகு ஒருமணி நேரத்தில் ஆயிரத்து ஒருநூற்றுப் பத்து மயிலாகச் சுழன்று சென்றுகொண்டே இருக்கின்றது. இவ்வளவு விரைந்து செல்லுமிதனியக்கம், நமக்கு எட்டுணையும் புலப்படவில்லை. இங்ஙனம், ஒவ்வொரு

கணமும் மனத்தினும் மிக்குச் செல்லும் பெரு விரைவுடன் நடைபெறும் இக்காலமென்னும் சுழற்சியிற் கிடந்துழலும் நம்மனோர் நிலையினை என்னென்பேம்? இந்நிலையில், 'தன்னையே நோவனோ, பிறரையே நோவனோ, தற்காலமதை நோவனோ,' என்றெழுந்த நந் தாயுமானச் செல்வர் திருவாக்கும்

'தோற்றஞ் சால்ஞாயிறு நாழியா வைகலும்
கூற்ற மளந்துநும்நா ளுண்ணும்'

எனப்போந்த நாலடியின் ஈரடியும், ஆழ்ந்து சிந்தித்தற் குரியன. திரை கடல் சூழ்ந்த இத்தரை நெடும் பரப்பு மட்டுமே யன்றி, அகல்வானத் தும்பருறைவார்தம் பதி என்னும், அனைத்தும் இக்காலத்தாற் கட்டுப்பட்டதேயாம்.

'இமையோர் தேஎத்து மெறிகடல் வரைப்பினும்
அவையில் கால மின்மை யான'

எனவரும் தொல்காப்பியச் சூத்திரம், தாம் மேவன செய்தொழுகும் தேவர் என்னுமவரும், இவ்வின்ப துன்ப வாழ்க்கையின் பண்பும் பயனும் துய்த்து வருதலை உய்த்துணர்த்துகின்றது.

இனி, இவ்வுலகங்களனைத்தும் 'காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும்' தத்துவாதீத முழுமுதற் செழும்பொருளாய், யாண்டும் ஒழிவற நிறைந்து விளங்கும், அன்பின் வடிவும் இன்பப் பிழம்புமான, பசுபதிப் பெயரிய தனி முதற்கடவுளாம் பரசிவம் ஒன்றே, இக்கால வரையறையிற் கட்டுப்படாததாம். இதனை விளக்குதற் பொருட்டே, 'ஊழிதோறூழி உயர்ந்த அடி' 'கணக்கு வழக்கைக் கடந்த அடி' 'பாலர் சாலப்பழயர்' 'அமுதுண்டார் உலந்தாலு முலவாதானை' 'ஊழிதோறூழி உயர்ந்தான் றன்னை' 'வருங்காலஞ் செல்கால மாயினானை' 'உலகமெல்லாம் வைப்பானைக் களைவானை வருவிப்பானை' 'அப்பாலைக் கப்பாலைக் கப்பாலானை' 'ஊழிபல கண்டிருந்தார் போலும்' 'கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க' 'சொற்பதங் கடந்த தொல்லோன்' 'முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே' 'அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்' என்றற்றொடக்கத்துத் தமிழ்மறை வாக்கியங்களெழுந்தன.

'மூலமு நடுவு முடிவு மின்றிக்
கால மூன்றுங் கடந்த கடவுள்'

என்னும் பட்டினத்தடிகளாரது திருவாக்குமது.

சிவஞ் சத்திதன்னை யீன்றும்
சத்திதான் சிவத்தை யீன்றும்
உவந் திருவரும் புணர்ந்திங்
குலகுயி ரெல்லா மீன்றும்
பவன்பிரம சாரி யாகும்
பான்மொழிக் கன்னி யாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித்
தன்மைதான் தெரியு மன்றே.

எனவரும் சிவஞான சித்தித் திருவாக்கான், இக்கால பேத இயல்களனைத்திற்கு மப்பாற்பட்டவன் 'பால்புரை பிறைநுதற் போலிந்த சென்னி, நீல மணிமிடற் றொருவ' னென்பது தெள்ளத் தெளித்துரைக்கப் பட்டமை காண்க. இனி அடுத்த பகுதியில், இக்காலத்தின் தோற்றம் முதலியன, சைவ சித்தாந்த நூற் கருத்தின் வைத்து எடுத்துரைப்பாம்.

---

# சமநிலை

[வல்லை - பாலசுப்பிரமணியன், பி. ஏ.]

96ஆம் பக்கத் தொடர்ச்சி

தம்மை நாடி வந்தவன் அரசனென் றுணர்ந்தும், அவன் வந்ததாகவே தாம் தெரிந்து கொள்ளாமல் முகத்தை மறுபக்கந் திருப்பிக் கொண்டு எழுந்துங்கூட நிற்காமல் தம் காரியத்திற் கண்ணுங் கருத்துமாயிருந்தார். அரசன் மிகவும் வியப்புற்று "ஓய் புலவரே, எம்மாலுமக் காகவேண்டிய உதவி யாதேனுமுளதேல் செப்புவீர்; அதனை யாம் நிறைவேற்றுவேம்" என்று கூறினான். அதற்கு அவர், உம்மா லெனக்கொன்றும் ஆக வேண்டியதில்லை. எனக்கும், என்மீது தன் செவ்விய கிரணங்களைப் பரப்பிக் கொண் டிருக்கும் ஞாயிற்றினுக்கும் இடையிலிருந்து நீவிர் விலகிப் போனால் சாலும்" என்று மொழிந்தார். எம் அன்பர்களே, இப்புலவரது மனத்தின் திண்மையினை யாம் என்னென்று கூறுவேம். இம்மறுமொழியைக் கேட்ட அரசன் வெட்கிப் போயினான்.

இடலி (Italy) நாட்டிற்குத் தலைநகரமாகிய ரோம் (Rome) என்னும் பட்டணம் சிறிது சிறிதாகப் பல்கிப் பெருகி, நாளடைவில், ஐரோப்பா (Europe) ஆசியா (Asia) ஆப்பிரிக்கா (Africa) என்னும் மூன்று பெரியகண்டங்களிலும் தன் ஏகாதிபத்தியத்தைச் (Supreme Imp-erialism) செலுத்தியது. இப்பெரிய அரசாட்சியை நடுநிலைதிறம்பாது நடத்திவந்தது, ரோம் நகரத்து வயது முதிர்ந்த பெரியோர் அறுநூற்றுவர் அடங்கிய நாட்டாண்மைக் கழகமேயாகும். (The Senate) அவர்களெல்லோரும் ஆண்டில் முதிர்ந்தவர்; வெள்ளிய மயிரினர்; தளர்ந்த யாக்கையர்; மாசிலா மனத்தர்; பெருமிதமுடைய தோற்ற முடையர். மற்றும் பழுத்த அறிவினர். ரோம் நகரம் நாளடைவில் தன் செல்வாக்குக் குறைந்து, பற்பல காரணங்களால் கேடுற்றபோது, அதன் ஏகாதிபத்தியத்துட்பட்ட நாடுகளையெல்லாம், நாகரிகமற்ற ஒருவகை சாதியார் (The Barbarians) தம் யாக்கையின் உரத்தாலும், படைக்கலங்களின் திண்மையாலும் சீர்குலைத்துக் கைப்பற்றிக் கொண்டனர். நாளடைவில் பற்பல நாடுகளையும் கைப்பற்றி முடிவில் அப்பெரிய இராஜ்யத்தின் தலைநகராகிய ரோம் நகரத்தையே அண்மி ஆண்டிருந்த பற்பல மாளிகைகளையும், சலவைக்கற் சிலைகளையும் இடித்தும், எரித்தும் ஒழித்தார்கள். அஞ்ஞான்று, நாட்டாண்மைக் கழகத்தார் அறுநூற்றுவரும், தம் மண்டபத்தில் அமைதியோடு அமர்ந் திருந்தனர். ஊர்ப்புறத்தில் நிகழும், நெஞ்சந் திடுக்கிடும் செய்திகள் அவர்கள் மனங்களைத் தாக்கிற்றில்லை. இறுதியில் வெற்றி கொண்ட இந்நாகரிக மற்ற சாதியார், கொளுவிய தீப்பந்தங்களோடும், உருவின படைக்கலங்களோடும், நன்றியில்லாத குரூரமான முகங்களோடும், வெற்றிச் சம்பன்னராய், நாட்டாண்மைக் கழகத்தினுட் புகுந்தார்கள். அச்சோ! ஆண் [illegible] ன்

187120

னுற்றது? இக்கொடியர்களைக் கண்ட அம்முனிவோர் ஒரு சிறிதும் அசைந்தாரில்லை. அவர் தம் முகங்களில் அச்சக் குறி தோன்றவேயில்லை. தம்மைச் சுற்றிலுமுள்ள ஊரெல்லாம் அழித்து, தம்மையும் மண்டபத்தினின்றும் துரத்த வந்த அப்பகைஞரை இவர்கள் திரும்பியும் பார்த்தார்களில்லை. அன்பர்களே, தாங்கள் வந்தவுடன் இக்கிழப் பிணங்களெல்லாம் தம் இன்னுயிரைக் காத்துக்கொள்ளப் பறந்தோடுவார்கள் என்று எண்ணியிருந்த இப்பகைஞர், அவ்வாறின்றி, அவர்கள் அமைதியோடு அமர்ந்திருத்தலைக் கண்டு, வேறொன்றும் செய்யத் தோன்றாமல் வியப்பும், நகைப்புங் கொண்டு சிறிது நேரம் தாங்களும் வாளா விருந்தனர்.

சம நிலையினையே சீரிய நிலையெனக் கொண்ட நம் இந்திய நாட்டில், இது போன்ற பல திருஷ்டாந்தங்களை எடுத்துக் காட்டலாம். "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்னும் முதுமொழிக்கு, விசுவாமித்திர அரசரை ஒரு சிறிதேனும் சட்டை செய்யாமல், அவர் ஏவிய போர் வீரர்களையும், ஆயிரக்கணக்கான படைக்கலங்களையும், தாம் தம்முன் நிறீஇய ஒரு புல்லிய தருப்பைப் புல்லினால் அழித்த வசிட்ட முனிவரே பேரிலக்காவார். இன்னும் இவர் போன்றவரெல்லாம், செய்தவம் நன்கு கைவரப் பெற்றோராகையால், இவர்கள் வேண்டிய வேண்டியாங்கு செய்யும் ஆற்றலுடையராவர். நமது திருநாவுக்கரசு நாயனாரின் சம நிலையான மனத்திண்மையினைச் சிறிது எண்ணிப் பாருங்கள். அவரை அமணர்கள் நீற்றறையி விட்டார்கள். அவ்வெவ்விய நீற்றறை "ஈசனெந்தை இணையடி நீழலே" இடைவிடாது நினைத்துக் கொண்டிருந்த அவர்க்கு,

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்"

றிருந்தது.

மறுபடியும் அவ்வமணர்கள் நஞ்சொடு கலந்த பாலினைப் பருகக்கொடுத்தார்கள். ஊழிக்காலத்துப் பெருநஞ்சினையே அடக்கி யுட்கொண்ட இறைவரை வழிபட்ட நமது அப்பருக்குச் சமணர்கள் தந்த நஞ்சு எம்மாத்திரம்? அவர் அதனை இன்புடன் பருகி இன்புற்றிருந்தார். இதனை தெய்வச் சேக்கிழார் பெருமான்,

"பொடியார்க்குந் திருமேனிப்
புனிதர்க்குப் புவனங்கள்
முடிவாக்குந் துயர்நீங்க
முன்னைவிடம் அமுதானால்
படியார்க்கும் அறிவரிய
பசுபதியார் தம்முடைய
அடியார்க்கு நஞ்சமுத
மாவதுதா னற்புதமோ"

என வியந்திருக்கின்றார். இவற்றினோடும் திருப்தி யடையாமல் பின்னும் அவர்கள் நம் நாயனாரை யானைமுன் விட நினைத்தார்கள். அப்போதும் அவர் அஞ்சாமல்,

"திண்ணன் கெடிலப் புனலும்
உடையா ரொருவர் தமர்நாம்
அஞ்சுவதி யாதொன்று மில்லை
அஞ்ச வருவது மில்லை"

என்று கூறினர். யானையும் நாயனாரை அணுக அஞ்சித் தன்னை யவர் மேல் ஏவினோரையே கொன்று ஓடிற்று. இறுதியாக அவர்கள் திருநாவுக்கரசரைக் கல்லிலே கட்டிக் கடலில் விட்டார்கள். ஆண்டும் அவர் மனஞ் சலித்தாரில்லை. சிவபெருமானது அஞ்செழுத்தினையே இடைவிடாது நினைத்துக் கொண்டு அக்கல்லினையே புணையாக்



கொண்டு, ... இனிப் பிறப்பெனுங் கடலை நீந்துதற்கு அறிகுறியாக, இத்தூல வடிவமான கடலையுங் கடந்தார். பின்னொன்று நாள் இறைவன் இவரது உண்மையான மன நிலையினை உலகத்தாருக்கு அறிவிக்க வேண்டி, இவர் முன் அழகிய பெண்களை யனுப்பியும், இவர் உழவாரப் பணி செய்கையில் பொன்னும், மணியும் வரச் செய்தும் பொன்னையும், மண்ணையும் ஒக்க நோக்கும் இயல்புடைய இவர் அவற்றினை இன்புற்று உவந்தாரில்லை. அப்பொன் மணி முத்துக்களை, கல்லோடும், மண்ணோடும் வாரி வாரி அப்பாலெறிந்தார். இவர் மனநிலையினை யறிதற்கு,

"வானந் துளங்கிலென் மண்கம்ப
மாகிலென் மால்வரையும்
தானந் துளங்கித் தலைதடு
மாறிலென் தண்கடலும்
மீனம் படிலென் விரிசுடர்
வீழிலென் வேலைநஞ்சுண்டு
ஊனமொன் றில்லா ஒருவனுக்
காட்பட்ட உத்தமர்க்கே"

என்னும் இவரது தனித்திருவிருத்தம் நமக்குத் துணையா யிருக்கிறது. இவர் போன்ற மனத்தின்கண் மாசற்றோரது துறவொழுக்கத்தினையும், அவர்கள் செல்வத்தையும், செல்வந்தர்களையும் அருவருத்துத் தள்ளும் பெற்றியினையும், தாம் காசித்தலத்தில் விசுவேசருடைய திருமுடியின்மேல் இட்டிருந்த தாமரை மலரைக்கொண்டு வந்து அன்புடன் அதனை அப்போது வெள்ளையானையின் மேல் ஊர்ந்துவந்த தேவேந்திரனிடம் கொடுக்க அதனை யவன் பாராட்டாமல் தன் செல்வச் செருக்கினால் யானையின் மத்தகத்தின்மேல் வைக்க, அவ் யானையும் அறியாமை வயப்பட்டதாகையால் அம்மலரைத் தன் துதிக்கையாலிழுத்துக் காலில் மிதித்துத் துவைப்ப, அவ்விழிந்த செய்கையினைக்கண்டு பொறாது சீற்றங்கொண்டு துருவாச முனிவர் கூறியதாகப் பரஞ்சோதி முனிவர் அருளிய,

"புள்ளியதோ லாடைப்
புனைந்தரவப் பூணணிந்த
வெள்ளிய செங்கண்
விடையா ரடிக்கமலம்
உள்ளிய மெய்யன்
புடையார்அருவருத்துத்
தள்ளிய செல்வத்
தருக்கினாய் என்செய்தாய்"

என்னும் திருவிளையாடற் புராணப் பாட்டு, நன்றாய்ப் படம்பிடித்துக் காட்டுவது போலிருக்கின்றது. தாம் அமைச்சுத் தொழிலை விடுத்து அரசனையும் பகைத்துக்கொண்டு, அழகிய ஆடையணி கலன்களை விரும்பாது, திருநீற்றினை உடம்பு முழுதும் பூசிப் பேய் போலத்திரியும் மாணிக்கவாசகப் பெருமானை அவரது சுற்றத்தார்கள் ஏசின போது, அவர் சொன்னதாகப் பரஞ்சோதி முனிவர் அருளிய,

"தந்தைதாய் குரவ ஞசான்
சங்கரன் கிராசை பெண்டிர்
மைந்தர் பல்லுயிருஞ் சுற்றம்
மாசிலா ஈசன் அன்பர்
அந்தமில் பிறவி யேழும்
அடுபகை[redacted]தேம்
எந்தையார் கருணை காட்டி
எம்மையாட் கொண்ட வன்றே."

"சுற்றமும் தொடர்பும் நீத்தேம்
துன்பமும் இன்பு மற்றேம்
வெற்றுடல் மானந் தீர்த்தேம்
வெறுக்கைமேல் வெறுக்கை வைத்தேம்
செற்றமும் செருக்குங் காய்ந்தேம்
தீவினை யிரண்டுந் தீர்த்தேம்
கற்றைவார் சடையான் கோலங்
காட்டியாட் கொண்ட வன்றே."

"ஊரெலாம் அட்ட சோறு
நம்மதே உவரி சூழ்ந்த
பாரெலாம் பாயல் அன்னல்
கோவணம் பரிக்கும் ஆடை
சீரெலாம் சிறந்த சாந்தம்
தெய்வநீ(று) அணிபூண் கண்டி
நீரெலாம் சுமந்த வேணி
நிருத்த னுட்கொண்ட வன்றே."

"இறக்கினும் இன்றே இறக்குக என்றும்
இருக்கினும் இருக்குக வேந்தன்
ஒறுக்கினும் ஒறுக்க உவகையும் உடனே
ஊட்டினும் ஊட்டுக வானில்
சிறக்கினும் சிறக்க கொடியதீ நரகம்
சேரினும் சேருக சிவனை [தால்
மறக்கிலம் பண்டைப் பழவினை விளைந்
மாற்றுவார் யாரென மறுத்தார்"

என்னு மித்திருவிளையாடற் புராணப் பாக்கள், சமநிலைத் தன்மைக்கே ஒரு பேரிலக்கியங் கற்பிப்பது போன்றிருக்கிறது.

"பார்முழுதும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல், ஆருந் துறத்தலரிதரிது" என்று சிறப்பித்துக் கூறும் பட்டினத்தடிகளாரது சமநிலைப் பட்டதான மனத்திண்மையினை விளக்குதற்கு, அவருடைய அருள்வாக்கு ஒரு சில ஈண்டுத் தருதும்.

"ஈர வேரித்தாழ்வழங்கு சடிலத்துக்
குதிகொள் கங்கை மதிமீது சைய
வண்டியங்கு வரைப்பின் எண்டோட் செல்
ஒருபால் தோடும் ஒருபாற் குழையும் [வ
இருபாற் பட்ட மேனி யெந்தை
ஒல்லொலிப் பழனத் தில்லை மூதூர்
ஆடகப் பொதுவில் நாடகம் நவிற்றும்
இமையா நாட்டத் தொருபெருங் கடவுள்
வானவர் வணங்குந் தாதை யானே
மதுமழை பொழியும் புதுமந் தாரத்துத்
தேனியங் கொருசிறைக் கானகத் தியற்றிய
தெய்வ மண்டபத் தைவகை யமளிச்
சிங்கஞ் சுமப்ப வேறி மங்கையர்
இமையா நாட்டத் தமையா நோக்கத்
தம்மார்பு பருகச் செம்மாந் திருக்கும்
ஆனைச் செல்வத்து வானோ ரின்பம்
அதுவே யெய்தினும் எய் ... க அதுமெனத்
தெறுசொ லாள ருறுசினந் ... திருகி
எற்றிய யீர்த்தும் குற்றங் கொளி ... இ
ஈர்ந்தும் போழ்ந்து மெற்றுபு குடை ... தும்
வார்ந்தும் குறைத்தும் மதநாய்க் கீந்தும்
செக்குரற் பெய்தும் தீநீர் வாக்கியும்
புழுக்குடை யழுவத் தழுக்கியல் சேற்றுப்
பன்னெடுங் கால மழுத்தி யின்னு
வரையிற வடைத்து மாறாக் கடுந்துயர்
நிரயஞ் சேரினும் சேர்க வுரையிடை
எனோ றென்னை யானுது விரும்பி
நல்ல னெனினு மென்க; அவரே
அல்ல னெனினு மென்க; நில்லாத்
திருவொடு திளைத்துப் பெருவளஞ் சிதை [யாது
இன்பத் தழுந்தினு மழுந்துக; அல்லாத்
துன்பத் துதையினும் துதைக; முன்பில்
இளமையொடு பழகிக் கழிமூப் புக்குறுகாது
என்று மிருக்கினும் மிருக்க; வன்றி
இன்றே யிறக்கினும் இறக்க; ஒன்றினும்
வேண்டலு மிலனே வெறுத்தலு மிலனே
ஆண்டகைக்குரிசில்நின் னடியரொடுங் குழு
தெய்வக் கூத்துநின் செய்ய பாதமும் [மித்
அடையவும் அணுகவும் பெற்ற
கிடையாச் செல்வங் கிடைத்த லானே"

என்னும் கோயினுன் மணிமாலைத் திருப்பாட்டும்,

"உடைகோ வணமுண் டுறங்கப்
புறந்திண்ணை யுண்டுணவிங்
கடைகா யிலையுண் டருந்தத்தண்
ணீருண் டருந்துணைக்கே
விடையேறு மீசர் திருநாம
முண்டித்த மேதினியில்
வடகோ டுயர்ந்தென்ன தென்கோடு
சாய்ந்தென்ன வான்பிறைக்கே"

என்னுந் திருப்பாட்டும் பட்டினத்தடிகளாரது, சுகதுக்கங்களைச் சமமாகப் பாராட்டும் நீர்மையை நன்கு விளக்குகின்றது.

இத்தகைய சமநிலைப் பேற்றைக் கைவரப்பெற்ற பெருந் தவத்தினோர் மாட்டு ஒருவித இறுமாப்பும் பெருமிதமும் எய்தப் பெறுதலைக் காண்கின்றோம். என்னை? அவர்கள் பிறர் தயவை நாடிநிற்றலும், பிறர் தம்மை மதித்துரைத்தலை விழைந்து நிற்றலும் இல்லையாகலானென்க.

"என்றுநாம் யாவர்க்கும் இடைவோமல்லோ
இருநிலத்தில் எமக்கெதிரா வாருமில்லைச்[ம்
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்
[லோம்
சிவபெருமான் திருவடியேசேரப்பெற்றோம்
ஒன்றினாற் குறையுடையோ மல்லோம்
[அன்றே
உறுபிணியார் செயல்ஒழித்திட் டோடிப்
[போனார்
பொன்றினார் தலைமாலை யணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணியபுண் ணியத்
[துளோமே"

"நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்
இன்பமே எந்நாளுந் துன்பமில்லைத் [லோம்
தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதில்
கோமாற்கேநாமென்றும்மீளா ஆளாய்க்[மே"
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோ

"இறுமாந்திருப்பன் கொலோ ஈசன்
பல்கணத் தெண்ணப் பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்
இறுமாந் திருப்பன் கொலோ" [றங்கு

என்னும் அப்பரது அருள்வாக்குகள், அவரது இறுமாந்த உள்ளத்தினை வெள்ளிடை மலைபோல் விளக்கிக் காட்டுவன. 'இன்பமே எந்நாளுந் துன்பமில்லை' என்னும் அடியில் இன்ப மென்றதனை, சாமானிய உலகப் பொருள்கள் பயக்கும் இன்பமல்லாது, சமநிலை யானெய்தும் இன்பமென்றறிக. அஃதாவது இன்பமும் துன்பமுமற் றிருத்தலே இவர்கட்குப் பேரின்பமெனக் கொள்க.





"வேண்டுதல், வேண்டாமை" என்பது இல்லாத இப்பெருந் தவத்தோர்கள் தாம் வாழும் அந்நாட்டு வழக்க ஒழுக்கத்தாலும், அந்நாட்டு மக்களின் கொள்கைகளாலும் ஒருகாலும் கட்டுப்பட மாட்டார்கள். அவர்கள் இவற்றையெல்லாம் கடந்தவர்கள். யாமெல்லாம், கிணற்றுத் தவளை தான் வசிக்கும் சிறிய பாழடைந்த கிணறே கடலென்று நினைத்துத் தாவிக் குதிப்பது போல, நாம் வசிக்கும் நாடே எந்நாட்டினும் முன்னுட்டப் படுதற்குரியது; நம்மொழியே எம்மொழியினும் சாலச் சிறந்தது என்பன போன்ற அறியாமை வயப்பட்டு அகங்காரத்தாற் பிதற்றும் கொள்கையினை யுடையோரா யிருக்கின்றோம். ஆனால் அப்பெரியோரோ, பெருங் கடலி னிடத்தில் அலைகளை மோதிக்கொண்டு திரியும் பெருந் திமிங்கிலங்கள். யாமெல்லாம்,

"உழுத சால்வழியே உழுவான் பொருட்டு
இழுதை நெஞ்ச மிதென்படு கின்றதே"

என்னும் திருவாக்கிற் கிணங்க, முன்னர் பலர் சென்ற ஒரு குறுகிய வழியினையே கடைப்பிடித்து, நடுவில் ஒரு சிறு தடைக்கல் நேரினும், அதனைக் களைந்தெறிய முயலாது, அதனைச் சுற்றிச் செல்லும் ஒரு புழுவென செல்பவர்கள். ஆனால் அப்பெரியோர்களோ வெனில், இச்சிறு நெறிகளைப் புறக்கணித்து, பெருமிதமூர்ந்த நடையுடன் அடர்ந்த காட்டினிடை வீறிட்டுச் செல்லுந்தோறும் நடுவே விழுதுவிட்டிருக்கும் பழு மரங்களையும், கருங்கற் பாறைகளையும் அகழ்ந்தெடுத்து அப்பால் எறிந்து, தனக்கென ஒரு புதிய வழியை யுண்டாக்கும் களிறு போன்றவர்கள். யாமெல்லாம் ஒரு சிறிய பாழ்பட்ட

குடிலின்மீது நின்று உலகத்தைப் பார்க்க விரும்புகின்றோம். உலகத்தின் தன்மையினை யுண்மையில் பார்க்காவிடினும் அதனைப் பார்த்ததாகப் பிறழ வுணர்ந்து தருக்கித் திரிகின்றோம். யாம் எவ்வளவு சுற்றளவு விஸ்தீரணத்தைப் பார்த்திருப்போமென்று, எம் அன்பர்களே, நீவிரே காண்மின்கள். பூமியின் அருகில் நின்று ஊன்றிப் பார்க்குந்தோறும், அதன்கண்ணுள்ள அழுக்கெலாம், நம் நோக்குக்குப் புலனாதல் போன்று, பெரிய சம நோக்கினை எய்தப் பெறாத நமக்கு மக்களின் பொய்யொழுக்கமும், அறிவின்மையும் நன்கு புலப்படும்.

ஆனால் சமநிலை வாய்க்கப்பெற்ற பெருந் தவத்தினோர்கள், இமயமலையுச்சியினின்றும் உலகத்தினைக் காண்பவருக்கொப்பாவார். அவர்கள் கண்களுக்கு உலகத்தின்கண்ணுள்ள மாசு ஒன்றும் தெரியாது. அவர்கட்கு யாவும் நல்லவையே. அவர்கள் எந்நாட்டினரும், எம்மதத்தினரும், எக்காலத்தினரும் ஒப்புக்கொள்ளும் தலைசிறந்த உண்மையான சீரிய கொள்கையினை யுடையாரா யிருக்கின்றனர். அவர்களை எந்நாட்டினரும், எம்மதத்தினரும், எக்காலத்தவரும், தம் நாட்டினரெனவும், தம் மதத்தினரெனவும், தம் காலத்தவரெனவும் கூறுதல் ஏலாது. அவர்கட்கு எந்நாடும் நன்னாடு. எம்மதமும் சம்மதம். அவர்கள் முக்காலத்திற்கும் உரியவர்கள். அவர்கள் உலகம் புகழும் ஓங்குயர் பெரியோர். இத்தகைய பெருந் தகைமை வாய்ந்தோரே, தொல்காப்பியர், திருவள்ளுவர், மெய்கண்டதேவர் கீதே (Geethe), ஸாக்ரடீஸ் (Socrates), முதலினோர். மற்றையோரின் கொள்கைகளையும், அவர்கள் நீரீஇய மதங்களையும், அவர்கள் பிறந்த அவ்வந் நாட்டினரும், அவ்வம் மதத்தினரும் பாராட்டாநிற்க, இச்சிலருடைய கொள்கைகளையே உலக முழுதும் பாராட்டிப் போற்றுகின்றது. இத்தகைய பெருமையினை, யாம் இக்கட்டுரைக்கு மகுடமாக எடுத்துக்காட்டிய கணியன் பூங்குன்றனார் பாடிய,

யாதும் ஊரே யாவருங் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன
சாதலும் புதுவ தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன் றிலமே முனிவின்
இன்னா தென்றலும் இலமே மின்னொடு
வானந் தண்டுளி தலைஇ யானாது
கல்பொரு திரங்கு மல்லற்பேர் யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறை வழிப்படூஉம் என்பது திறவோர்
காட்சியிற் றெளிந்தன மாகலின் மாட்சியில்
பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே''

என்னு மிப்புற நானூற்றுப் பாட்டு எத்துணை அழகிதாக எடுத்துக் காட்டுகின்றது பாருங்கள்.

இதனை யாவரும் அறிந்து இன்புறுதற் பொருட்டு, இதற்குக் கண்டுள்ள உரையினை அங்ஙனமே பெயர்த்துத் தருகின்றாம்.

"எமக்கு எல்லாம் ஊர், எல்லாரும் சுற்றத்தார்; கேடும் ஆக்கமும் தாமே வரினல்லது பிறர்தரவாரா; நோதலும் அது தீர்தலும் அவற்றை யொப்பத் தாமே வருவன; சாதலும் புதிதன்று. கருவிற் றோன்றிய நாளே தொடங்கி யுள்ளது; வாழ்தலை யினிதென்று உவந்தது மிலம்; ஒரு வெறுப்பு வந்தவிடத்து இன்னாதென் றிருத்தலுமிலம். மின்னுடனே மழை குளிர்ந்த துளியைப் பெய்தலான் அமையாது கல்லையலைத்து ஒலிக்கும் வளவிய பேர்யாற்று நீரின் வழியே போம் மிதவை போல அரியவுயிர் ஊழின் வழியே படுமென்பது நன்மைக் கூறுபாடறிவோர் கூறிய நூலாலே தெளிந்தேமாகலான், நன்மையான் மிக்கவரை மதித்தலுமிலேம். சிறியோரைப் பழித்தல் அம்மதித்தலினு மிலேம்."

இப்பாட்டின் கடையிரண்டடிகளின் கருத்தினை நம்முட் பெரும்பாலோர் அனுபவித்தறிய வியலாது. நாம் நம்முட் சிறிது பிழைத்தோரை யிகழ்ந்தும், சிறிது நற்காரியம் செய்தோரைப் புகழ்ந்தும் வருகின்றோம். ஆனால் ஆராயுங்கால் அவ்விகழ்ச்சிக்கும், அப்புகழ்ச்சிக்கும் அவ்விரு திறத்தாரும் உரியரல்லர். ஊழின் வழிப்பட்டாதல், சந்தர்ப்பங்களை நோக்கியாதல், அல்லது மற்றோரால் வற்புறுத்தப் பட்டாதல் இவர்கள் இகழ்ச்சிக்கும் புகழ்ச்சிக்கும் உரியனவான காரியங்களைச் செய்கிறார்களேயன்றி, தாமே தோன்றி எக்காரியமும் செய்கின்றாரல்லர். ஒரு சிறிய மக்கட்டொகுதியில் ஒரு கள்வனாதல், ஒரு கொலைக்காரனாதல் தோன்றினால், உண்மையறிவு வாய்க்கப் பெற்றோர் அவர்களைப் பழியாது அவர்கள் தீச்செய்கைக்கு உடனாயிருந்த அம்மக்கட் டொகுதியினையே பழித்துத் தூற்றுவர். திருடுவோரும், கொலை செய்வோரும், தாம் வறுமையா லெய்தும் பசிப்பிணியாலும், கேடுசெய்யும் நெஞ்சத்தாலும் உந்தப்படுகின்றார்கள். ஆகையால் வறுமையாளர் நிறைந்துள்ள அம்மக்கட் டொகுதியில் செல்வம் யாவர் மாட்டும் ஏறக்குறைய ஓரே தன்மையாக பங்கிடப்படாது, சிலர் மாட்டுத்தான் குவிந்து கிடக்கின்றது. இத்தகைய நேர்மையற்ற வழியில் செல்வம் மக்கள்மாட்டு காண்டற்கு அம்மக்கட் டொகுதியே காரணமா யிருக்கின்றது. "என்னில் யாரும் எனக்கினியாரிலை" என்பதுபோன்று, ஒருவன் எல்லாவற்றிலும் தன்னுயி ரொன்றினையே சாலச்சிறந்ததாகக் கருதுகின்றான். அத்தகைய ஒருவனுக்குத் தன் உயிரை உடலினோடு இருத்தி வைக்கப் போதிய உணவு கிடைத்திலதேல் அவன் இறந்துபடுவான். ஆனால் அவன் இறத்தற்குத் துணிவு பெறாமல், "என்னுயிரினும் தித்திப்பானது வேறொன்றுமில்லை. ஆதலால் என்னுயிரைக் காக்க ஏதுஞ் செய்வேன்" என்று துணிந்து செய்யத் தகாத காரியங்களைச் செய்கிறான். வறுமையினாலும் நோயாலும் பீடிக்கப்பட்ட ஒருவன் தன்னைத்தான் வாழும் மக்கட்டொகுதி நிராகரித்துவிட்டதாக நினைத்துக் கொள்கின்றான். தன்னுயிரினும் மேற்பட்ட சிறந்த பொருள் வேறொன்றில்லையெனக் கருதும் அவன், தன்னை நிராகரித்து, அசட்டை செய்து ஒதுக்கித் தள்ளிய மக்கட் டொகுதியைத் தான் நிராகரித்துத் தள்ளுகிறான். ஆகவே அவன் கொலை செய்தற்கும் அஞ்சுகின்றானில்லை. ஆகையால் அன்பர்களே, அவன் தலையில் கொலைக்குற்றம் ஏற்றுவது யாங்ஙனம் என்பதை நீங்களே ஆராய்ந்து கூறுமின்கள்.

அங்ஙனமே சிறிது நல்லன செய்வதுபோல் உலகிற்குக் காட்டுகின்றோரை, நுண்ணிய உண்மை யறிவாணிறைந்த பெரியோர்கள் மட்டுமீறிப் புகழ்ந்திடார்கள். அந்நல்லன செய்வோரும் தாம் செய்யும் நல்லனவற்றைப் புகழ் கருதியும், செல்வங் கருதியும், மற்றோரால் வற்புறுத்தப்பட்டும் செய்

கின்றார்கள். அவர்கள் அவ்வாறு செய்யாவிடின், அவர்கட்குப் பதிலாக வேறு பெயர்கொண்ட வேறொருவர் வந்து முன்னையோர் செய்த அக்காரியத்தை எவ்வாற்றானும் செய்தே தீருவார். எமது வீட்டில் அமாவாசைத் தருப்பணஞ் செய்தற்கு வேங்கடராமையர் வாரா தொழிந்தாராயின், நமச்சிவாய குருக்கள் கட்டாயம் வந்தே தீருவார். இங்கிலாந்து நாட்டில் 16-ம் நூற்றாண்டின் இறுதியில் ஷேக்ஸ்பியர் என்னும், நாடக நூலியற்றிய பெரும் புலவரும் தம் நாடக நூற்களைச் செய்தது பெரியதோ ரதிசயமன்று. அவர் இலங்கியிருந்த பதினாறாம் நூற்றாண்டின் இறுதியில், ஆங்கில மக்கள் நாடக விலக்கியத்தைச் சாலவும் விரும்பினார்கள். மற்றும் ஷேக்ஸ்பியருக்கு முன்னமே, லிலி (Lyly) பீல் (Peele) கிரீன் (Greene) கிட் (Kyd) மார்லோ (Marlowe) என்னும் பெரும் புலவர்கள், நாடகத் துறையிற் பற்பல நூற்களியற்றிப் பிற்காலத்தில் ஷேக்ஸ்பியர் தம்புகழை என்றென்றும் நிலைநாட்டிக் கட்டப் போகும் நாடகமென்னு பெரிய மாளிகைக்கு, அஸ்திவாரம் போட்டார்கள். ஆதலால் ஷேக்ஸ்பியர் என்னும் பெயர்கொண்டவொருவர் இருந்திராவிட்டால், அவர் தம் அறிவுகொண்டு இயற்றியிட்ட நூற்களை யியற்ற வேறொருவர் மற்றொரு பேர்கொண்டு வந்தேயிருப்பார். எனினும், ஷேக்ஸ்பியர் செய்த நூற்களுக்கும், மற்றொருவர் செய்யும் நூற்களுக்கும் சிற்சில வேறுபாடுகளு மிருக்கலாம். அவைகளைப் பற்றி நமக்குக் கவலையில்லை. அது போன்றே, ஏழாம் நூற்றாண்டின் இறுதியில் நம் தென்னிந்திய நாட்டில் சமணசமயத்தினை யழித்தொழிப்பதற்குத் திருஞான சம்பந்தர் தோன்றியிராவிட்டால் அதனால் சைவசமயம் அழிந்து போயிராது. அக்காலத்திற் கேற்ற கோலங்கொள்ளும் மற்றொருவர் நந்தமிழ் நாட்டில் தோன்றிச் சமண சமயத்தைத் திருஞான சம்பந்தர் போன்று அழித்தே யிருப்பார். நாம் இப்போது திருஞான சம்பந்தரை வழிபடுதல் போன்று, அம்மற்றொருவரையும் கடவுளெனப் பூசித்து வணங்கி யிருப்போம். இதனால் யாம் திருஞான சம்பந்தரது புகழிற்கு ஏதம் செய்கின்றாமென அன்பர்கள் நினைத்தல் கூடாது. அவ்வண்ணமே, அமெரிக்கா தேசத்துப்பெரும் போரை (War of American Independence) நடாத்திய தலைவராகிய ஜியார்ஜ்,வாஷிங்டன் (George Washington) என்பாரும், பிரான்ஸு நாட்டுப்பெரும்போரிற் றோன்றிய, நெபோலியன் (Napoleon) என்பாரும், இற்றைஞான்று நம்மிந்தியநாடு உரிமை பெறச் செய்தலே தம் கண்ணுங்கருத்துமாக் கொண்டுள்ள பெருந்தகை யாளரான காந்தியடிகளும் போன்ற வெவ்வேறு மக்களும் தோன்றியிருத்தல் கூடும்.

“ மாட்சியில் பெரியோரை
வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல்
அதனினும் இலமே ”

என்னும் புறநானூற்றுப் பாட்டின் கடை யிரண்டடிகள் எம்முறையால் விளக்க முறுதல் காண்க.

இனிச் சமநிலையுடையார்க்கு நடுவுநிலைமை திறம்பாமை, பெரியதோ ரணிகலமாமென்க. நடுவுநிலைமை திறம்பாமை கடவுளுக்கும், கடவுளாற் படைக்கப்பட்ட ஒவ்வொரு பொருளுக்கும் இயல்பாயமைந்த விலக்கணம். நெருப்புத் தன்னைத் தொடுபவர் சிறி



யார் பெரியாரென்றும், அறிவார் அறியாதாரென்றும், தானறியாது ஒரே படித்தாய்ச்சுட்டுவிடும். மழை இது பறைச்சேரி, இது பார்ப்பனச்சேரி என்னும் வேறுபாடு பாராட்டாது ஒரே பெற்றியதாய் யாண்டும் பெய்யும். கடவுளும் தாம் நடுவுநிலைமை யுடையரென்பதைச் சுந்தரமூர்த்தி நாயனாரிடங் காட்டிவிட்டார். தாம் வேண்டா மென்றும் வலிந்தாட் கொள்ளப்பட்டவரும், தாம் வீசிய அன்பு வலையிற் பெருமானைச் சிக்கவைத்துக் குற்றேவல் செய்யப் பெற்றுக் கொண்டவரும் ஆகிய சுந்தரமூர்த்தி நாயனார், திருவொற்றியூரில் மகிழமரத்தடியில் தாம் சங்கிலியாருக்குத் தந்த ஆணையைமீறி, அவ்வூரெல்லையினின்றும் ஓரடி எடுத்து வைத்த அக்கணமே, அவர் கண்கள் இருண்டு போமாறு இறைவர் திருவுளம் பற்றினார். அவ்வாறே அவையும் இருண்டன. பிழை செய்தவர் எத்தகையரா யிருப்பின் என் ?

“ சமன்செய்து சீர்தூக்கும்
கோல்போல் அமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க்
கணி ”

என்னும் பொய்யா மொழிப்படி, சான்றோர்க்கெல்லாந் தலைவராகிய கடவுளன்றோ முதலில் நடத்திக் காட்டல் வேண்டும்.

திருவாரூரில் செங்கோ லோச்சின மனுநீதிகண்ட சோழனைவிட, நடுவுநிலைமைக்கோ ரணிகலமாக, வேறொருவரை எடுத்துக்காட்ட வேண்டுமோ ? அம்மன்னர் என் செய்தார் ? தாம் தவங்கிடந்து பெற்றெடுத்த ஒரே ஒரு அருமை மைந்தன், அபுத்தி பூர்வமாகத் தன் தேர்க்காலில் ஓராவின் இளங்கன்று தானே வந்து சிக்கிமடிய, அதனைக் கண்டு, அம்மநு நீதிகண்ட சோழன், தீங்கிழைத்தவன் வேண்டு மென்றே தீய சிந்தையுடன் செய்தானில்லை என்று தெரிந்தும், அவன் தான் தவங்கிடந்து பெற்ற ஒரு செல்வ மகன் என்றும் பாராது, இறந்துபட்ட உயிர் வாயில்லாத ஓரற்ப உயிர்தானே என்று இகழாமல், எல்லா உயிர்கள் மாட்டும் வைத்துள்ள பெருங் கருணையினால் தானே சென்று, தேரூர்ந்து, தன் தலைமகன் பதறப்பதற அவனைத் தன் பெரிய தேருருளைகளுக் கிரையாக்கினான். என்னே, இம்மன்னனின் நடுவுநிலைமை யிருந்தவாறு ! செங்கோன்மை என்றால் இதுவன்றோ !

இதனை எழுதுங்கால், மற்றொரு மகம்மதிய அரசனுடைய செங்கோன்மை எம் நினைவிற்கு வருகின்றது. சுல்தான் மகம்மது என்னும் ஓரரசன் ஒரு பகல் தன் கொலுமண்டபத்தில் வீற்றிருக்கையில், ஒரேழைக் குடியானவன் ஆண்டுப்போந்து, “ எம் பெருமானே ! நமது செங்கோலோங்குக. சின்னாட்களாக நமது அரசாங்கத்தைச் சார்ந்த ஒருவன், ஆறலைக்குங் கள்வனைப்போல், எளியேனது இல்லத்தில் புகுந்து எனக்கும், என் மாட்டுத்தொடர்புடைய என் மனைவி மக்களுக்கும், ஆற்றொணா இன்னல்களை இழைத்து வருகின்றான். நின் செங்கோலாட்சியில் இத்தகைய சீர்கேடுகள் நிகழுதல் அழகிதேயோ ” என்று அரற்றினான். தான் காக்கும் மன்னுயிர்க்குற்ற தீங்கு தனக்கே யுற்றதென அம்மானிலக் காவலன் துணுக்குற்று அக்குடியானவனைநோக்கி “அஞ்சற்க நீ அவனால் துன்புறும்போது நின் இல்லத்திற்கெம்மை அழைத்தேகுதி. யாம் பின் தொடர்கின்றோம் ” என்று பணிந்து அந்நள்ளிரவில் வாளே

திய கையனைப் புறப்பட்டான். அவ்வேழையின் குடிலை யணுகியவுடன் வீட்டிலுள்ள விளக்கை யணைத்துவிட அக்குடியானவனுக்கு ஆணை தந்து, வீட்டிற்குள் சரேலெனப் புகுந்து தன் கைவாளினல் அக்கள்வனை வெட்டி வீழ்த்தினன். வெட்டி வீழ்த்தியதும் உடனே விளக்கேற்றப் பணித்து, அதன் ஒளியால் குருதி வெள்ளத்தில் மிதக்கும் பிணத்தின் முகத்தை யுற்று நோக்கிப் பிறகு பெரிதும் ஆறுதலடைந்தவன் போன்று முழங்காலிட்டுக் கடவுளை வணங்கினன். பின்னர், குடியானவனை விளித்துச் சிறிது பாலும் ரொட்டியும் கொணரச்செய்து, அதனை யருந்தியவுடன், அரண்மனைக் கேகுதற்குக் குடியானவனிடம் விடை கேட்டான். அதற்குக் குடியானவன் "எம், ஆண்டகையே, பொறுத் தருளுதி; உற்ற காலத்து வந்துதவி என் இடுக்கணை அகற்றினீரேனும், நீவிர் செய்த சில செய்கைகள் எனக்கு மறைபொருள்களா யிருக்கின்றன. முதற்கண் விளக்கை யணைக்கச் சொன்னதும், பிறகு விளக்கொளியால், வெட்டுண் டிறந்தவன் முகத்தைப் பார்த்துக் கடவுளை வழிபட்டதும், பின்னர் என் ஏழை இல்லத்தில் உணவு உட்கொண்டதும் இவையெல்லாம் எனக்கு விளங்குமாறு அருள் செய்தல் வேண்டும்" என்று மன்றாடினன். அதற்கு அம்மன்னன், "நீ, முதலில் எனது அரசாங்கத்தைச் சார்ந்தவன் நின்னைத் துன்புறுத்துகிறன் என்று முறையிட்டபோது, அக்கயவன் என் சேனைத் தலைவர்களுள் ஒருவனகவாதல், அல்லது என் சொந்த மகனகவாதல் இருக்கலாமோ என்றையுற்றேன். அத்தகையோனுடைய முகத்தை நேரிற் பார்த்தால், நடுவு நிலைமையோடு அவனைக் கொல்ல என்கை ஒருகால் தயங்குமோ என்றஞ்சி, அவனைப் பார்க்க முடியாதவாறு விளக்கை யணைக்கச் சொன்னேன். பிறகு விளக்கொளியால் இறந்தவன் முகத்தைப் பார்க்கையில், அவன் என் மகனல்லன் என்று தெரிந்து மகிழ்வெய்தி இறைவனைப் போற்றினேன். பின்னர் நீ மூன்று நாட்களுக்கு முன்னர் நின் துன்பத்தை என்னிடம் முறையிட்டபோது, 'நின் இடுக்கணைத் தீரா முன்னர் யான் உணவுகொள்ளேன்' என்று சூளுறவு செய்துகொண்டதால், இன்று இவனைக் கொன்றபிறகு, மூன்று நாட்களாகப் பட்டினி கிடந்த யான் மிகவும் பசித்தேனதலால், இதுபோழ்து நின் இல்லத்தில் முதற்றடவை உணவருந்தினேன்" என்றான்.

ஒரு பொருளையாதல், ஒரு நூலையாதல், ஒரு மனிதனையாதல், நடுவுநிலைமையோடு பார்த்தற்கு எத்துணை அரிதாயிருக்கின்றது? மஞ்சட்காமாலை யுடைய ஒருவனுக்கு அவன் பார்த்தனவெல்லாம் மஞ்சள் நிறமுடையனவாகத் தோன்றுதல்போல், ஒரு பக்கமே சாய்ந்த மனத்தினையுடைய எமக்கு, யாவும் தம் உண்மை யுருவங்களோடு தோன்றாமல், சாய்ந்த வண்ணமாகவே காணப்படும். முதற்கண் ஒரு நூலை ஆராயப்புகுங்கால் பளிங்குபோன்ற தூயமனதுடன், நீதிபதியொருவன் வழக்கினை விசாரித்தல் போன்று நடுவுநிலைமையோடு அதனை யாராய்தல் வேண்டும். அவ்வாறின்றி, நம்நாட்டு நூலாயிற்றே, நம்முன்னோர் இயற்றியதாயிற்றே, நம் சமய நூலாயிற்றே ஆகவே, அந்நூற்கு இணையாக வேறொன்று இருக்கலாகாது என்னுங் குறுகிய நோக்குடன் அதனை யாராய்ந்தால், இழிதகைமையான நூலும் பெரிதாய்க் காணப்படும். அங்ஙனமே, அயல் மொழியிலுள்ள அயல்நாட்டு நூலொன்று சிறப்புடையதாக இராது என்று முன்னமேயே எண்ணிக்கொண்டு, அந்நூலை யாராயப் புகுந்தால், மிகப்பெருமையினையுடைய நூலும், இவ்வாசிரியனது குறுகிய அகக்கண்களுக்கு மிகக் குறுகியதாகவே தோன்றும். இவ்வண்ணமே மற்றவைகளிலும் என்க. "என்னினும் எனக்கினியாரிலை" என்னும் தற்போதம் உண்ணின்று மக்களை உந்துங்காலும், எம் சமயம், எம் நாடு, எம் மொழி, எம் பெரியார், எம் நூல், எம் பழக்கங்கள், எம் பழமை என்னும் உணர்ச்சிகள் அவ்வந் நாட்டாரிடை முனைந்து நின்று, ஒன்றோடொன்று முரண்படுதலால், பெண்கள் அடுப்பங்கரையில் நிகழ்த்தும் சச்சரவு முதல், உலகத்தையே அசைத்து அழிக்கவல்ல பெரும்போர்கள் வரை நிகழ்கின்றன. அந்தோ, இத்தகைய போர்களெல்லாம் ஒருவரை ஒருவர் உண்மையில் அறியாமையால்தான் விளைகின்றன. சைவப் பற்றுடைய யாம், கிறிஸ்தவ மதத்தாரது விவிலிய நூலில் ஆபாசக் கொள்கைகளை நிரம்பி யிருக்கின்றன என்று ஒரு சபையில் சொல்வோமானல், எம்மைப் போன்றே சிந்திக்கப் பழக்கப்பட்டிருப்போர்களெல்லாம், ஆம் என்று நம்பி "ஆ, இச்சொற்பொழிவாளர்க்கு எத்துணைச் சைவப்பற்று; இவர் பரசமய கோளரியோ, பிரதிவாதி பயங்கரமோ" என்று எம்மைமெச்சி, மாலையிட்டு, ஆர்ப்பரிக்கின்றார்கள். இவ்வளவுக்கும் யாம், அவ்விவிலிய நூலைக் கண்ணாலுங் கண்டதேயில்லை. காணவும் வேண்டுமோ? "நம்முடையன வல்லாதனவெல்லாம் தீமையே; புறக்கணிக்கத் தக்கவையே" என்னும் பாழடைந்த மனப்பான்மை எமக்கு உண்ணின்றுணர்த்துகின்றது. ஆ! எத்துணை ஆணவம்; எத்துணை அந்தகாரம்.

இங்கிலாந்து நாட்டில் ஓரூரில், ஒரு நாள் மாலைப்போது இரண்டு வயது முதிர்ந்த பெண்மக்கள் உல்லாசமாக ஒரு தெருவின் ஊடேபோய்க் கொண்டிருக்கையில், மதாசாரியார் ஒருவர் தான் வளர்த்திருந்த புறாக்களுக்குத் தானிய மணிகளை இறைத்துக் கொண்டிருந்தார். அப்பெரியோரை, அப்பெண்மக்களுக்குள் ஒருத்திகண்டு எள்ளி நகையாடித் "தங்காய்! பார்த்தனையா, அப்பேதை மகனை புறாக்களுக்குத் தீனி கொடுப்பதைப் பெரிய வேலையென்று எண்ணித் தன் காலத்தை வீணகப் போக்கிக் கொண்டிருக்கின்றான்" என்றாள். அதற்கு மற்றொருத்தி "இருக்கலாம் எனினும் அவர் நம்முடைய மதாசாரியராயிற்றே" என்று பதிலிறுத்தாள். "ஆ! நம்முடைய மதாசாரியரா அப்பெரியார்? என்ன மூடத்தனமாய்ப் பிதற்றிவிட்டேன். தூயவெண்மையான அழகிய அப்புறாக்களுக்கு, சீவகாருண்யத்தோடு தீனிகொடுப்பது எத்துணை அழகா யிருக்கின்றது பார்த்தனையா? இப்படி யன்றோ காலத்தைக் கழித்தல் வேண்டும்? இனி நாமும் இப்படிச் செய்யலாம்" என்று முதலில் பேசியவள் கூறினள். இப்படியும் மக்களது மனப்பான்மை இருக்குங் கொல்? வியப்பு! வியப்பு!

(தொடரும்)



---

# மதிப்புரை

**வேளாளரது தோற்றமும் அவர் தம் வரலாறும்:**—இக்கட்டுரை திரு. வல்லை. பாலசுப்பிரமணிய முதலியார் பீ. ஏ. அவர்கள் ஆராய்ந்து எழுதியது. இது பல செய்யுள் நூல்களையும் ஆராய்ச்சி நூல்களையும் ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டுள்ளது; மேற்கோள் பலவற்றைக்கொண்டு மிளிர்கின்றது. வேளாளரைப்பற்றிய எல்லாவற்றையும் இதனல் சுருக்கமாகத் தெளியலாம். திணை வேற்றுமையேகூடாது என்னும் இக்காலத்தி…

ஒருசார்குலத்தினர் தமது பண்டைப் பெருமையைப் பாராட்டிக் கொள்ளுதலால் யாருக்கும் யாதும் தீமையின்று. ஆனால் பலர் வரம்புகடந்து, தம்மைத் தாமே புகழ்ந்து மகிழ்தலோடு அமையாது பிறகுலத்தாரைப் பெரிதும் இழிவு படுத்தியும் இல்லாதனவற்றைப் படைத்தும் உள்ளவற்றைத் திரித்தும் தத்தம் பத்திரிகைகளில் எழுதிக் களியாட்டயர்தலைக் கண்டு வருகின்றோம். அன்னோர் தம் குலத்துக்கும் பொது நலத்துக்கும் எத்துணை இன்னல் இழைக்கின்றனர் என்பதை அறியாமை வருந்தற்பாலது. இக்குற்றம் இந்நூலில் இல்லாமை கண்டு நனி மகிழ்கின்றோம். ஒருவர் தம்முடைய குலத்தின் வரலாற்றை அறிய விழைவது நன்றே. ஆனால் அது சிறந்தே இருக்கவேண்டும் என்பது இல்லையே. குலப்பெருமை முன்னரே பெற்றுள்ளார் அது தாழாது உயர்தலுக்கு உழைத்தலையும் அப்பெருமை பண்டே அமையாத குலத்தினர் அதனைத் தமது அறிவு வொழுக்கங்களால் உயர்த்தற்குப் பாடுபடுதலையுமே கடமையாகக் கைக்கொள்ளும்படி ஊக்குவதே இத்தகைய நூல்களால் விளையும் பயனென நாம் எண்ணுகின்றோம். இவ்வாசிரியர் இது போன்ற சிறந்த நூல்களைத் தமிழகத்துக்கு அளிப்பாராக.

**திருவெள்ளூர்ப் புராணம்:**—இது, கொங்கு நாட்டின்கண்ணதான வெள்ளாற்றின் கரைமருங்குள்ள வெள்ளூரென்னுந் தலமான்மியம் எடுத்துரைப்பதாம். இவ்வூர் பேளூர் என்னும் பெயரான் இப்பொழுது வழங்கப்படுகின்றது. இஃதியற்றினார் அட்டாவதானம் சொக்கலிங்கப்புலவர்எனப் புத்தக முகத்துரைக்கப்படுகின்றது. இதன் சிறப்புப்பாயிரத்துள் இவர் குன்றத்தூர் அட்டாவதானம் சொக்கநாதர் எனக் கூறப்படுதலின், இவர் தஞ்சைவாணன் கோவை உரையாசிரியராக விளங்கும் குன்றத்தூர் அட்டாவதானம் சொக்கப்ப நாவலர் தாமோ என நினைக்க இடந்தருகின்றது. அட்டாவதானம் என்னும் பட்டாபிதானமும், அவர் தம் பிறந்தகமாக இலங்கும் திருத்தலமான குன்றத்தூரும் இதற்குறுசான்றாக விளங்குகின்றன. இச்சிறப்புப் பாயிரத்தி னீற்றடி முதல் சிதைந்து நிற்றலோடு ' எஞ்சிய பன்னிருவருமே பாடினாரே ' எனவும் முடிதலான் இந்நூற்குச் சொக்கப்ப நாவலர் எம்மட்டில் உரிமையுடையாரென்பது துணிந்து கூறுதற்கில்லை. இப்பாயிரத்துள், இவரது தந்தையார் சர்க்கரை என்னும் பெயருடையா ரெனவும், இவர் அருண்மொழித் தேவராம் சேக்கிழார் பெருமானது மரபின் முன்னோரான கூடல்கிழார் கோத்திரத்து வழித்தோன்றல் எனவும் கூறப்படுவது இச்சொக்கப்ப நாவலர் வரலாற்றினை ஆராயப் புகுவார்க்குப் பயன்படுவதொன்றாம். அறுநூற்றான் மிக்க விருத்தப் பாக்களான் யாக்கப்பட்ட இந்நூல், அந்நாவலரான் இயற்றப்பட்டதென்றே துணியப்படுமாயின், இஃது அந்நாவலரது பாவன்மையைக் காட்டுதற்குக் கருவியாயிலங்கு மென்பதிற் றட்டில்லை. பொருட்பகுதியில் இஃதேனைய தலபுராண முறையே முறையாக வைத்தோதப்பட்ட தொன்றாம். இதன் விலை ரூபா 1–4–0. வேண்டுவார் பேளூர் திருக்கோயில் அர்ச்சகர் பிரம்மஸ்ரீ சுந்தர குருக்கள், சேலம் பட்டக்கார், அச்சியந்திரசாலைத் தலைவர், இவர்களிடமிருந்து பெறலாம்.

**படிக்காசுப்புலவர் சரிதம்:**—இது படிக்காசுப் புலவர் வரலாற்றினை அடிப்பட எடுத்து விளக்குவது. சந்தக் கவிக்கிலக்காய் நின்ற இப்புலவர் வரலாற்றில் அவர் அவ்வப்போது பாடிய செந்தமிழ்ப் பாக்கள் பல ஆண்டாண்டு நின்று இந்நூற்கு இன்பச்சுவையூட்டுமென எடுத்துரைத்தல் வேண்டா. இஃது அப்பழைய கதையினை இக்காலத்துக்கேற்குமாற்றான் புதிய முறையில் எடுத்துரைக்க வேண்டுமெவாவொடும் எழுதப்பட்டிருக்கின்றது. தெள்ளிய இனிய நடையில் இதனை எழுதியோர் திரு. சி. கு. நாராயணசாமி முதலியாராவர். இவர் முன்னுமிதுபோல் பல புலவர் சரிதங்களைத் தமிழகத்திற்கு எழுதியுதவி யிருக்கின்றனர். இதன் விலை ரூபா 0–8–0. வேண்டுவார் இ. மா. கோபால கிருஷ்ணக்கோன், புதுமண்டபம் மதுரை, என்றவிலாசத்திற் கெழுதிப் பெறுக.

# திருச்செந்திலாதிபன் திருவருட்சங்கம்

சித்திரைத் திங்கள் 3-ம்நாள் இரவு 7-மணிக்கு யாழ்ப்பாணத்தார் மடத்தில் பல அன்பர்கள் கூடினார்கள். திருவாளர் சோமசுந்தர உபாத்தியாயரவர்கள் இசைக்கருவியுடன் தமிழ் வேதம் பாடினார்கள்.

சைவத் திருவாளர் அ. முத்துக்கிருஷ்ண முதலியார் அவர்கள் அவைத் தலைமையில் மாணவன் கந்தசுவாமி செருத்துணை நாயனார் புராணமும், திருநெல்வேலி திருவாளர் மாணிக்கவாசக முதலியாரவர்கள் திருக்குறளில் நடுவு நிலைமை என்பதையும், திருவாளர் அருணாசலம் பிள்ளையவர்கள் திருக்குறிப்புத் தொண்டர் சரிதமும், திருவாளர் சுந்தரம் பிள்ளையவர்கள் செல்வச் சிறப்பையும் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

தலைவரவர்கள் தக்க முடிவுரை கூறினார்கள். காரியதரிசியால் வந்தனோபசாரத்துடன் சங்கங் கலைந்தது.

## திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை திருவிழா

4-ம் நாள் திங்கள்கிழமை இரவு 8-மணிக்குக் கடைவீதியில் மேலைக் கோவில்முன் சங்கத்தின் சார்பாய் பல அன்பர்களும் அங்கத்தினரும் கூடினார்கள். தமிழ்வேத மாணவர்கள் தேவாரமும் பாடினார்கள்.

திருவாளர் சோமசுந்தர உபாத்தியாயரவர்கள் திருநாவுக்கரசு மூர்த்தி நாயனார் சரிதமும், காரியதரிசி திருவாளர் புராணிகர் முத்துக்குமாரசுவாமி பிள்ளை அப்பூதியடிகள் சரிதமும் கேட்டோர் விரும்பும்படி திருக்குறள் முதலிய நூல் ஆதாரவோடும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அப்பமூர்த்திக்கு நிவேதனமும் தரிசனமும் பூர்த்தி அடைந்தபின் அருள்பெற்று அன்பர் குழாங்கள் பலரும் மகேசுரபூசை முறையில் ஒன்றாயிருந்து பலவகை சித்திரான்னங்களுமுண்டு களித்தார்கள் என முத்துக்குமாரசாமி பிள்ளை (காரியதரிசி திருச்செந்திலாதிபன் திருவருட சங்கம், திருச்செந்தூர்.) எழுதுகிறார்.

---

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூ. 1-8-0. | தபாற்கூலி |
| வெளிநாடு | ,, 2-0-0. | இல்லை. |

**விளம்பர விகிதம்**

| | |
|---|---|
| முழுப்பக்கம் | ரூ |
| அரைப்பக்கம் | |
| கால்பக்கம் | |

# அறிக்கை

1. சமாஜத்துக்கு அனுப்பவேண்டிய சந்தா, நன்கொடை முதலிய எல்லாத் தொகைகளும் திரு. C. இரத்தின முதலியார் அவர்கள், பொருட்காப்பாளர், சைவசித்தாந்த மகா சமாஜம், G. P. O. சென்னை என்ற விலாசத்துக்கே அனுப்பப்படல் வேண்டும்.

2. பத்திரிகைக்குக் கட்டுரை, ஆண்டுவிழா அறிக்கை, நடவடிக்கை முதலியன அனுப்புவோர் தெளிவாக ஒரு பக்கத்தில் எழுதி 15-ம் தேதிக்குள் திரு. மணி - திருநாவுக்கரசு முதலியார் அவர்கள், பத்திராசிரியர், "சித்தாந்தம்," 25, ஆயலூர் முத்தையா முதலியார் தெரு, சென்னை, என்ற விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

3. பத்திரிகை சேரவில்லை, அனுப்பவேண்டும் என்பன போன்ற கடிதமாயினும், வேறு எவ்வகைப் பொருளடங்கிய கடிதமாயினும் காரியதரிசி, 92, வரதா முத்தியப்பன் தெரு, சென்னை என்ற விலாசத்துக்கே அனுப்பப்பட வேண்டும்.

4. ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு, ஏப்ரல் மாத இதழ்கள் சிலவே கையிலிருத்தலால் சந்தாதாரராகச் சேர விரும்புவோர் தங்கள் சந்தா ரூபா ஒன்றரையை முன்பணமாக அனுப்பிக் காரியதரிசிக்கு எழுதிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். புதிய சந்தாதாரர்கட்கு முன்பணம் வராவிடில் வி. பி. மூலம் தான் பத்திரிகை யனுப்பப்படும்.

5. ஒவ்வொரு இதழ் தபாலில் வருந்தோறும் இதழைச் சுற்றி விலாசம் எழுதியுள்ள ராப்பர் கடிதத்தில் "ம-ா-ா-ஸ்ரீ" என்பதற்கு மேலே அச்சந்தாதாரர் எண் குறிக்கப்படும். ஒவ்வொரு சந்தாதாரரும் பணம் அனுப்பும்போதும், பத்திரிகை சேரவில்லை என்றது போன்ற கடிதங்கள் எழுதும்போதும் தம் விலாசத்தோடு சந்தாதாரர் எண் இன்னதென்பதையும் குறித்து எழுத வேண்டும்.

6. சந்தாதாரர்கள் தங்கள் விலாச மாறுதல்களை உடனுக்குடனே காரியதரிசிக்குத் தெரிவிக்க வேண்டும்.

7. எல்லாச் சந்தாதாரர்களுக்கும் ஒவ்வொரு மாத இதழும் அம்மாதம் பத்தாந்தேதி தபாலில் அனுப்பப்படும். இதழ் சேரவில்லை யென்பதை அம்மாதம் இருபத்தைந்தாம் தேதிக்குள் தெரிவிக்க வேண்டும்.

---

'ஆதி வாழிய அஞ்செழுத் தோடுவெண்
பூதி வாழிய புண்ணியர் வாழிய
நீதி வாழிய நீள்புவி வாழிய
கோதில் சைவக் குலமிக வாழியே.'

[illegible] the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah.
[illegible]d Published by Mani, Thirunavukkarasu Mudaliar for the
[illegible]nta Maha Samajam.